SRIMAD BHAGAVATHA RAHASYAM (IN TAMIL)

ஸ்ரீ ஞானாநந்த ஸ்வாமிகள் எழுதிய

# ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

ஸகந்தம் 1 , 2 & 3

தமிழக்கம்:
ஸ்ரீமதி லக்ஷ்மீ ராஜப்பா


பதிப்பாளர் :

ஆர்ஷ அவிநாஷ் பவுண்டேசன்
104, 3வது வீதி, டாடாபாத், கோயமுத்தூர் – 641012
போன் :-+ 91 9487373635

ஈ மெயில் :- **arshaavinash@gmail.com**
www.arshaavinash.in

© காப்பிரைட் : ஸ்ரீமதி லஷ்மீ ராஜப்பா

அனைத்து உரிமைகளும் ஆசிரியருக்கே

இந்த புத்தகத்தை **www.arshaavinash.in** என்ற இணையதளத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.



ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

**ஸ்ரீஞானானந்த ஸ்வாமிகள் எழுதிய**

# ஸ்ரீமத்பாகவத ரஹஸ்யம்

நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ள

நூலாசிரியர் **ஸ்ரீமதீ லக்ஷ்மீ ராஜப்பா**

அவர்களின் முகவுரை....

பூஜ்யஸ்ரீ ஞானானந்த ஸ்வாமிகளால் மலையாளத்தில் எழுதப்பட்ட பாகவத ரஹஸ்யம் என்ற நூலைப் பற்றி வெகுநாட்களாகவே கேள்விப்பட்டிருந்த போதிலும், இறைவனருளால் அதனைப் படித்துக் கேட்கும் வாய்ப்பு சமீபத்தில்தான் கிட்டியது.

பாகவதம் என்பது ஸர்வ வேதாந்த ஸாரம் என்பதும், ஸ்வானுபூதியால் உணரப்பட வேண்டியதொன்று என்று அறிவுபூர்வமாகத் தெரிந்திருந்தபோதிலும், ஸ்ரீஞானானந்த ஸ்வாமிகளின் ஸம்ப்ரதாயமான வேதாந்த விளக்கவுரையானது அதன் உண்மையான ஆழமான தன்மையால் என்னுள்ளத்தைத் தொட்டது. அதுமட்டுமின்றி, மலையாளத்தில் உள்ள இந்த தத்துவ உரையைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் எழுந்தது. பகவானுடைய ஸங்கல்பத்தினால் அதற்கேற்ற சூழ்நிலைகளும் ஸாதகமாக அமைந்து துணைசெய்தன.

முதலில் இதனை என்னுடைய நிதித்யாஸனத்திற்காக மட்டுமே எழுத ஆரம்பித்த போதிலும், ஸ்ரீஸ்வாமிகளின் சீடரும் தற்போது பாலக்காட்டிலுள்ள ஸ்ரீசிவானந்த ஆச்ரமத் தலைவருமான ஸ்ரீநித்யானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளை அணுகித் தெரிவித்தபோது, அவர் இதை அவசியம் பிரசுரிக்க வேண்டுமென வலியுறுத்தினார். அதேபோல் ப்ரஹ்மஸ்ரீ நொச்சூர் வேங்கடராமன் அவர்களும் தமிழில் இப்படி ஒரு நூல் அவசியம் வேண்டுமெனக் கூறினார்.

இந்நூல் யாருக்காக?

எந்த நூலைத் தொடங்கும் முன்னரும், இதனைக் கற்கத் தகுதி உடைய அதிகாரியைக் கூறுவது மரபு.

ஸ்ரீமத்பாகவதம் பக்தர்களிடையே மிகவும் ப்ரஸித்தி பெற்றதாக இருந்தாலும், பெரும்பாலும் அதன் கதைப்பகுதிக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டு வந்துள்ளது. ஆனால் ஸ்ரீஞானானந்த ஸ்வாமிகளின் பாகவத ரஹஸ்யமோ, உயர்ந்த தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு மெய்யறிவு பொக்கிஷமாகவும் உள்ளதால், கதைப்பகுதியினைச் சுருக்கி, விரிவான வேதாந்த கருத்துக்களையும், தத்வார்த்தங்களையும் அந்நூலில் உள்ளபடியே மொழிபெயர்த்துள்ளேன்.

ஆகவே வெறும் இலக்கிய ரஸனைக்காகவும், கதைப்பகுதிக்காகவும் பக்திக்காகவும் அல்லது ஒரு சடங்கு எனக் கருதியும் பாகவதத்தை நாடுபவர்களாக அல்ல, இந்த பாகவத ரஹஸ்யம்.

உலகப்பற்று குறைந்து, முக்தியில் தீவிர நாட்டம் உடையவர்களுக்கு, உயிர்-இறைவன்-உலகம் ஆகியவற்றின் உண்மைத்தன்மையை உணரத் துடிக்கும் ஸாதகர்களுக்கு, இந்நூல் ஒரு மாபெரும் வழித்துணையாக இருக்கும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

முதன்முதலாக இந்த நூலின் மலையாளப் பதிப்பை படித்துக் காட்டிய ஸ்ரீராமகிருஷ்ணன் அவர்களுக்கும், பின்பு மொழிபெயர்ப்பில் உதவிய ஸ்ரீவேங்கடேச்வரன் அவர்களுக்கும், ஸ்ரீமதீ மீரா (ஆர்ஷ வித்யா குருகுலம், ஆனைக்கட்டி) அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி.

இந்நூலைப் படித்துக் கேட்கும்போதும், மொழிபெயர்த்து எழுதும்போதும், மீண்டும் வாசிக்கும்போதும் மீண்டும் மீண்டும் எனக்கு ஆனந்தத்தை வழங்கிக்கொண்டிருப்பதுபோல், உங்களுக்கும் ஆனந்தத்தை அருள, பகவான் ஸ்ரீக்ருஷ்ணரை மனதார ப்ரார்த்திக்கிறேன்.

(e-mail : lrajappa@gmail.com)

ஓம் ஸ்ரீகுருப்யோ: நம:

ஓம் ஸ்ரீகிருஷ்ணாய பரமாத்மநே நம:

ஸ்ரீஞானாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் இயற்றிய

# ஸ்ரீமத்பாகவத ரஹஸ்யம்

பரீக்ஷித்து மஹாராஜா ப்ரஹ்ம சாபத்தினால் தக்ஷக விஷ ஜ்வாலையில் தகிக்கும்போது, அவரைக் காப்பாற்ற எழுந்ததுதான் ஸ்ரீமத் பாகவதம்.

பாகவதம் அன்றும் அதனைச் சாதித்தது, அதோடு இன்றும் அஞ்ஞானமென்னும் ப்ரஹ்ம சாபத்தால், காலமென்னும் தக்ஷகனின் கொடிய விஷரூபமாகிய மரணத்தினால் பீடிக்கப்பட்ட ஜீவன்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, பாகவதம் வெறும் புராணம் மட்டுமல்ல, மரணத்திலிருந்து ஒரு ஜீவனைக் காப்பாற்றும் அமிர்தமும் ஆகும்.

பெரும் புண்ணியம் செய்தவர்களே, பாரதத்தில் பிறக்கவும் பாகவதத்தைப் படிக்கவும் முடியும் என்பது மஹான்களின் கருத்து.

ஜீவன் ஞானத்தினால் மரணத்தை வென்று அமரத்துவம் அடைய முடியும் என்பதனை **தரதி ஶோகம் ஆத்மவித்।, ப்ரஹ்மவித் ஆப்நோதி பரம்।, வித்யயாம்ருதமஶ்நுதே।, நாந்ய: பந்தா வித்யதே அயநாய।** போன்ற வேத வாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

அந்தப் பரம உத்தமமான ப்ரஹ்ம ஞானம் பாகவதத்திலிருந்து கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்தத்தான் அந்த மஹாகவி பாகவதத்தை, **ஸத்யம் பரம் தீமஹி।** என்று தொடங்கி, **ஸத்யம் பரம் தீமஹி।** என்று முடிக்கிறார். அந்த பரம ஸத்யமான ஆத்ம தத்துவத்தை பாகவதத்தின் வாயிலாக உறுதியாக அறிந்துகொள்ள முடியும் என்றும், அவ்வாறு அறிந்துகொண்டபின் நிதித்யாஸனம் செய்ய வேண்டும் என்றும் அவர் உபதேசிக்கிறார்.

மேலும், **பிபத பாகவதம் ரஸமாலயம்** என்றுள்ள வாக்கியமானது, அறிந்துகொள்ள வேண்டிய, அனுபவிக்க வேண்டிய, ரஸஸ்வரூபமான ஞானாம்ருதத்தை மரணம் வரை அருந்த வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**ரஸோ வை ஸஹ।** என்ற வேத மந்திரத்தில் உள்ள ரஸ என்ற சப்தம் இங்கும் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு இதனை நாம் தெரிந்துகொள்ளலாம்.

பாகவதமாகிய ரஸம் என்பது ஆத்மஞான அனுபூதியல்லாமல் மற்ற எதுவுமில்லை என்பதனைப் பெரியோர்கள் உறுதியாக அறிந்திருந்தனர்.

பரீக்ஷித்து மஹராஜாவின் அந்திம நாளில் அத்விதீய ப்ரஹ்ம போதத்தைத்தான் சுகப்ரஹ்ம மஹரிஷி ஸ்ரீமத்பாகவதத்தின் பன்னிரெண்டாவது ஸ்கந்தத்தில் உபதேசித்தார். உபதேசித்தவரின் உண்மையான நிர்விகல்ப பாவத்தில் கேட்பவர் லயித்து, பின்னர் இருவரும் திருப்தி அடைகின்றனர். நிர்விகல்ப போதமானது பாகவதத்திலிருந்து கிடைக்கும், அதுவே அடைய வேண்டிய ஒன்று என்பது இதன் மூலம் தெரிகிறது.

ஞான யஜ்ஞத்தின் வாயிலாக, உறங்கிக் கிடந்த ஞான வைராக்கியங்களை எழுப்பிவிட வேண்டும் என்று நாரத மஹரிஷிக்கு ஆவல் எழுந்தது. அதனை எவ்வாறு செய்வது என்பதை அறிந்துகொள்ள அவர் விழைந்தபோது, ஸநத்குமாரரின் வாயிலாக பாகவத ஸப்தாஹத்தைப் பற்றி அறிந்துகொண்டார். அதனை நடத்தவும் அவருக்கு

ஒரு வாய்ப்பு கிடைத்தது. பாகவத ஸப்தாஹத்தின் பலனாக, உறங்கிக் கிடந்த ஞான வைராக்கியங்கள் விழித்தெழுந்து பக்தியுடன் இணைந்தன. பின்பு முக்திக்குக் காரணமாக ஆயின.

இதன் மூலம் பாகவத ஸப்தாஹம் என்பது ஞான யஜ்ஞமே என்பதும், உலகியல் பலன்களைப் பெறுவதற்காக அதனை கர்மக் கட்டுப்பாடுகளால் தாழ்த்துவது தவறு என்பதும், ஒப்பில்லாத ஞான செல்வத்துடன் கூடிய நிர்விகல்ப ப்ரஹ்ம பாவமே பாகவத ஸப்தாஹத்தின் முக்கிய பலன் என்பதும் தெளிவாகிறது.

நிர்விகல்ப ப்ரஹ்ம ஞானம் ஒன்றே முக்திக்குக் காரணம் என்பதனை, தரதி ஶோகம் ஆத்மவித் முதலிய வேத வாக்கியங்களைக் கொண்டும், மஹான்களுடைய உபதேசங்களைக் கொண்டும்  நாம் தெரிந்துகொள்கிறோம்.

பாகவதம் முக்தி ப்ரதான க்ரந்தம் என்றால், இதன் வாயிலாக நிர்விகல்ப ப்ரஹ்ம ஞானம் கிடைக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை. எனவே, பாகவதம் பக்தி சாஸ்த்ரம் மட்டுமே என்று எண்ணுவது பொருத்தமற்றது என்பது தெளிவாகிறது.

வேதப் பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்டே புராணங்கள் எழுந்துள்ளன. பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தத்தில், பகவான் உத்தவருக்கு பக்தியைப் போதிப்பதற்காகவே, அவரை கோகுலத்திற்கு அனுப்பினார் என்று சிலர் வியாக்கியானம் செய்கிறார்கள். அது வேதத்திற்கும் பாகவதத்தின் உட்கருத்துக்கும் ஏற்புடையதல்ல. கோபியர்களுக்கு ஞானத்தை உபதேசிப்பதற்காகவே உத்தவர் கோகுலத்திற்குச் சென்றார் என்று பாகவதத்தில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

கோபியரின் ஒருமித்த பக்தியைக் கண்டு உத்தவர் அதிசயித்ததும் உண்டு. அதனால், கோபிகைகளுக்கு ஞானம் தேவையில்லை என்று அர்த்தமல்ல. ஞானம் பெற்ற பின்னரே எவரும் உண்மையான மன அமைதியை உணர முடியும். அலைபாயும் மனதை நெறிப்படுத்தி, தத்துவத்தில் நிலைநிறுத்தாத எவருக்கும் மன நிம்மதி ஏற்பட வாய்ப்பேயில்லை.

**க்ருஷ்ணஸ்ய தயித: ஸகா।** என்றுள்ள உத்தவருடைய தனிப்பட்டப் பெருமையினால், அவர் அசாதாரண பக்தர் என்பது தெளிவாகிறது. அவருடைய பக்தி, கோபியருடையது போன்ற கபடமற்ற பிரேமை பக்தியல்ல, ஞானபூர்வமான பக்தி. எனவேதான், அவரைப் பற்றிக் குறிப்பிடும்போது, **ஶிஷ்யோ: ப்ருஹஸ்பதே, புத்திஸத்தம** முதலிய சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பிறருக்கு ஞானத்தை உபதேசிக்கக் கூடிய பிராப்தி இருப்பதைத்தான், உத்தவருடைய தனிப்பட்ட பெருமை எடுத்துரைக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், தன்னிச்சையாகச் செய்யப்படும் விளக்கங்கள் கேட்பவர்களை திசை மாற்றுகிறது. உடலை உள்ளடக்கிய கவசம்போல், தத்வார்த்தங்களை உள்ளடக்கியவை கதைகள். அந்தக் கதைகளுக்கே தவறான விளக்கங்கள் அளித்தால் என்ன செய்வது?

கர்ம மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் ஸகுண பக்தி வளரும். அது வளர்ந்தால் ஞானம் கிடைப்பதற்குரிய பக்குவம் கைவரும். இது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியது.

ஆனால் ஸகுண பக்தி ஒன்றே ஒரு ஜீவனின் லக்ஷியம் என்று கூறுவது பொருத்தமற்றது. ஞானமில்லாமல் நிர்குணமான பராபக்தி ஒருபோதும் ஏற்படாது என்பதை அறிந்த பிறகும், ஞானத்தைப் புறக்கணித்துவிட்டு செய்யும் பக்திப் பிரசங்கம்

வெறும் ஸகுண பக்தி மாத்திரமே அன்றி வேறு என்ன?

**மம மாயா துரத்யயா।, மாமேவ யே ப்ரபத்யந்தே।, மாயாமேதாம் தரந்தி தே।** போன்ற பகவத் வாக்கியங்களை எடுத்துக் காட்டி ஸகுண பக்தியை மட்டுமே நிலைநாட்டுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். **மாமேவ யே ப்ரபத்யந்தே।** என்பதற்கு நிர்விகல்பக ஞானம் என்ற அர்த்தம் அவர்களுக்கு நினைவிருப்பதில்லை.

ஸகுண பாவத்தில் கடவுளை அடைய முடியும் என்பது அவ்வாக்கியத்தின் அர்த்தம் என்றால், அந்த ஸகுண நிலை கோபியர்களுக்கும் உத்தவர்க்கும் அர்ஜுனனுக்கும் இருக்கவில்லையா? அவர்கள் அந்த நிலையில் மாத்திரம் மாயையை ஜெயித்துவிட்டார்களா?

இதுவரை கூறியதன் சுருக்கம் :

பக்தி ஞான வைராக்கியங்களுடன் பரிபக்குவமடைந்து, உலகியல் விஷயங்களை மறந்துவிட்டு, நிர்விகல்ப ப்ரஹ்ம பாவத்தில் நிலைத்திருப்பதே ஒவ்வொரு ஜீவனின் லக்ஷியம்; ஸ்ரீமத் பாகவதம் அதனை அடைய வைக்கும்.

ஞானத்திற்கு கால தேச கர்த்ரு வித்தியாசமில்லை. பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய எல்லா வர்ணத்தினருக்கும் அவரவர் கர்மங்களுக்கேற்ப பலன் விதிக்கப்படுகிறது. என்றாலும், எல்லா வர்ணங்களிலும் எல்லா ஆச்ரமங்களிலும் உள்ள எல்லா மனிதர்களுக்கும் பாகவதத்தைப் படிக்க உரிமை உண்டு. எனினும், அவரவர் ஸம்ஸ்காரங்களுக்கேற்ப பலனை அனுபவிப்பார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாகவதமென்பது வெறும் புத்தகமோ கவிதையோ அல்ல. அது பகவானின் மகிமை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதிலும் உலக விஷயங்களையே தொடாமல், ஈச்வரனுடைய மகிமையை மட்டும் வர்ணிப்பதுதான் ஸ்ரீமத் பாகவதம்.

**இதம் பாகவதம் நாம புராணம் ப்ரஹ்ம ஸம்ஹிதம்** என்று கூறப்பட்டுள்ளது. சிரத்தையுடனும் பக்தியுடனும் இதனைக் கேட்பதால் மாத்திரமே ஒருவருக்கு அந்தக்கரண சுத்தி ஏற்பட்டு, ஞானத்தை அடைவதற்குரிய அருகதை வருகிறது என்பதை உட்கருத்தாகக் கொண்டே ஸ்ரீமத்பாகவதம் இயற்றப்பட்டுள்ளது.

இனி, பாகவதத்தில் கூறப்பட்டுள்ள தத்வார்த்தங்களைக் காண்போம்.

ஸ்கந்தம் 1

## 1.1 சௌநகாதி முனிவர்களின் கேள்வி

நைமிசாரண்யத்தில் உலக நன்மைக்காக ஆயிரம் வருடங்களாக யாகம் செய்துகொண்டிருந்த சௌநகாதி முனிவர்கள், யாகசாலைக்கு வந்த ஸூத முனிவரிடம், "எதனால் ஆத்மதிருப்தி உண்டாகுமென்று எங்களுக்குக் கூறுங்கள்" என்று வேண்டிக் கொண்டனர்.

பன்னெடுங்காலமாக அந்த முனிவர்கள் யாகங்கள் பல செய்திருந்தும், அவர்கள் ஆத்ம திருப்தியை அதுவரை அனுபவித்ததில்லை என்பதும், ஆத்ம திருப்தி எவ்வாறு உண்டாகும் என்பதை அவர்கள் அறியவில்லை என்பதும் இதிலிருந்து விளங்குகிறது.

பொதுவாக எல்லா கர்மிகளுடைய கதையும் இதுதான். அவர்கள் தேவர்களை ஸந்தோஷப்படுவார்கள் என்று நம்பிப் பல சடங்குகளைச் செய்கிறார்கள். பிறர் ஸந்தோஷப்பட்டாலும், தன்னுடைய ஸந்தோஷமே தனக்குப் பயன்படும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

ஸத்யமான ஞானமே ஸந்தோஷத்தின் உறைவிடம். அஸத்யமான ஜட நாமரூபங்களிலிருந்து, அதாவது ஸம்ஸாரத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் செல்கிறோமோ, அவ்வளவு சீக்கிரமாக ஸத்-சித்-ஆனந்தமயமாகிய ஈச்வரனின் அதாவது ஆத்மாவின் அருகில் செல்ல முடியும். அதுவே ஸந்தோஷத்தின் உறைவிடம்.

## 1.2 ஸத்ஸங்கத்தின் மஹிமை

ஞானிகளுடைய தொடர்பில்லாமல் யாருக்குத்தான் இவை தெரியும்? வைதிக அநுஷ்டானங்களை, நிஷ்காம்யமாக (பலனை எதிர்பார்க்காமல்) செய்வதன் பலனாக ஸத்ஸங்கம் கிடைக்கிறது. அவ்வண்ணமே சௌநகாதி முனிவர்களுக்கும் எதிர்பாராமல் ஸூதரின் தரிசனம் கிடைத்தது. குறைந்த காலமேயானாலும், அவருடைய ஸகவாசத்தினால்தான் அந்த முனிவர்கள் ஸந்தேஹமற்றவர்களாகவும், திருப்தர்களாகவும் ஆனார்கள்?

கர்மங்களை யஜ்ஞம் போன்று செய்தால், அதன் பலனாக அந்தக்கரணம் (உட்புலன்கள்) தூய்மையாகி, ஞானத்தை கிரகிக்கக் கூடிய திறமை கைகூடும். அப்போது ஞானத்தை உபதேசிக்கக்கூடிய திறமையுள்ளவரைக் கண்டறிந்து, அவரைப் போற்றி வணங்கி, அவரது உபதேசங்களைக் கேட்டு நடக்கும் நற்புத்தி உண்டாகும். இதுதான் ஸநகாதி முனிவர்களுக்கும் ஆயிற்று. இதுபோல் நடந்தால் எல்லோருக்கும் அவர்களுக்குக் கிடைத்தது போன்ற ஸத்ஸங்கம் கிடைக்கும்.

ஈச்வரனின் மகிமையை அறிவதே ஆத்ம திருப்தியடைய ஒரே வழி என்று ஸூதர் முனிவர்களுக்குக் கூறினார். வர்ணாச்ரம தர்மங்களும், கர்மாநுஷ்டானங்களும், தானம், விரதம், தவம், யாத்திரை போன்ற அனைத்தும், ஈச்வர பக்தியும், ஈச்வர நம்பிக்கையும் வளர்ந்து, ஈச்வரனுடைய மகிமையை அறிந்து, நிலையில்லாத இவ்வுலகாயதங்களிலிருந்து விடுபடுவதற்காகவே ஆகும்.

எல்லா ஜீவர்களின் வாழ்க்கையின் குறிக்கோளும், இவ்வுலகப் பற்றுக்களிலிருந்து விடுபட்டு ஈச்வரத்வத்தை அடைவதுதான். இது மட்டுமே ஒருவருக்குத் தன்னிறைவை அளிக்கும்.

எந்த ஓர் அறிவு, இந்த உன்னதமான நிலையை அளிக்குமோ, அதனை அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்த உதவுவதுமே பாகவதத்தின் நோக்கம்.

கர்மங்களை மட்டுமே விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கும் சௌநகாதி முனிவர்கள் மேலான ஞானத்தைப் பற்றிக் கேட்காமல் வேறு பல கேள்விகளைக் கேட்கிறார்கள்.

### 1.4 விதுரர் கூறும் அறிவுரையின் நோக்கம்

இந்த முதல் காண்டத்தில், அடுத்த முக்கியத் தருணம், விதுரர் திருதராஷ்டிரனுக்கு அறிவுரை கூறுவது. எப்பொழுதுமே திருதராஷ்டிரனை தர்ம மார்கத்தில் செலுத்தவும், அவனது உள்ளத்தில் வைராக்கியத்தை வளர்க்கவும் விதுரர் எவ்வளவோ முயன்று வந்தார். ஆனால் அது முடியாத காரியமாகவே இருந்தது. இப்பொழுது, திருதராஷ்டிரன் வயோதிகத்தின் இயலாமையில் இருக்கும்போதாவது அதனைச் செய்ய முடியுமா என்று விதுரர் மீண்டும் முயற்சிக்கிறார்.

அறிவில்லாதவனிடம் எத்தனை முறை தோற்றாலும், ஞானிகள் அந்தத் தோல்வியைப் பொருட்படுத்த மாட்டார்கள். மீண்டும் எந்த வழியிலாவது அவர்களுடைய அறிவின்மையை முயற்சிப்பார்கள். காரணம், ஞானிகளுக்கு இவ்வுலக வெற்றிகளும் தோல்விகளும் ஒன்றே ஆகும். தனது வாழ்வின் இறுதி மூச்சு வரை அவர்கள் உலக நன்மைக்காகவே தனது உடல், பொருள், வாக்கு மூலம் செயலாற்றிக் கொண்டே கொண்டிருப்பார்கள். அதுதான் அவர்களுடைய தவம். ஒரே ஒரு ஜீவனை அறியாமையிலிருந்து விடுவித்தாலும், அதனைத் தங்களது வாழ்க்கையின் வெற்றியாகக் கருதுவார்கள்.

### 1.5 பரீக்ஷித்து மஹாராஜாவின் வாழ்வில்...

முதல் ஸ்கந்தத்தில் அடுத்த முக்கியத் தருணம் பரீக்ஷித்து மஹாராஜாவின் சரித்திரத்திலிருந்து வருகிறது. பூமி பசுவாகவும், தர்மம் காளையாகவும், கலியானது அதர்மத்தின் உருவமான கொடூரக் கொலைகாரனாகவும் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து நல்ல பழக்கவழக்கங்களுடன் தர்மத்தின்படி நடந்தால், கறவைப் பசுவுக்கொப்பான இப்பூமியிலிருந்து நமக்கு வேண்டியவற்றையெல்லாம் பெற்று செழிப்புடனும், ஸந்தோஷத்துடனும் வாழலாம் என்பது தெரிகிறது.

அப்படியல்லாமல், கலியினால் பீடிக்கப்பட்டு, ஒழுக்கமின்றி, நீதிக்குப் புறம்பாக நடக்கும்போது, வாழ்க்கை ஆபத்து சூழ்ந்ததாகவும், அழிவில் சென்று முடிவதாகவும் இருக்கிறது.

மேலும், அதர்மத்தை ஒழித்து, நல்ல பழக்கவழக்கங்களுடன் வாழ்ந்தாலும், நெறிமுறைக்கு ஒப்ப நடக்க முடியாமல் கஷ்டப்படும் ஒரு நல்ல ஜீவனை எப்படியாவது காப்பாற்றி, தர்மத்தை நிலைநிறுத்துவதே ஓர் அரசனின் கடமை. இது கலிபுருஷனின் கொடூரத்தினால் அவதிப்படும் காளையைக் காப்பாற்றுகின்ற பரீக்ஷித்து மன்னனின் கதையிலிருந்து நாம் உணர்ந்துகொள்ளும் தத்துவம்.

தனக்குத் தங்குவதற்கு இடம் வேண்டிய கலிக்கு பரீக்ஷித்து மன்னன், கள்குடி, சூதாட்டம், ஹிம்ஸை, விபசாரம் என்ற நான்கும் நடக்குமிடத்தில் இடம் அளித்ததிலிருந்து இந்த நான்கு தீயப் பழக்கங்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டுமென்று உபதேசிப்பதற்காகவே என்பது தெரிகிறது.

மன்னனின் வாழ்வில் அடுத்தக் கட்டத்தில், சற்றுமுன் கொடூரக் கலியை நாட்டை விட்டுத் துரத்திய அதே பரீக்ஷித்து மன்னன், சஞ்சலமான மனதை

உடையவனாகி, இழிவு தரும் செயலைப் புரிகிறான். மனிதனின் மனம் எப்பொழுது மாறுமென்று யாருக்கும் தெரியாது. எத்தனையோ நல்ல பழக்கங்களும், தர்ம சிந்தனையும் இருந்தாலும், ஒருவன் தீய வழியில் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதே நாம் இதிலிருந்து உணரும் தத்துவம்.

ஸ்கந்தம் 2

பரீக்ஷித்தின் கேள்வியான, மரணத்திலிருந்து தப்பிக்க என்ன வழி என்பதே இந்த உலகிலுள்ள எல்லா மனிதர்களின் கேள்வியுமாகும். எல்லோருக்கும் மரணம் வந்தே தீர்கிறது. அதைக் கண்டு எல்லோரும் பயப்படவும் செய்கிறார்கள். அதனால் எல்லோரும் இந்தக் கேள்விக்கான விடையைத் தெரிந்துகொள்ள ஆவலுடனும் இருக்கிறார்கள். ஆகையால் பரீக்ஷித்தின் இந்தக் கேள்வியை சுகர் பாராட்டிவிட்டு, பின்பு பலரும் இந்தக் கேள்வியைப் பற்றிச் சிந்திப்பதோ, கேட்பதோ இல்லை என்கிறார்.

ஏனென்றால் மனிதர்களின் வாழ்க்கை கபடத்தினாலும் சூதினாலும் களங்கப்பட்டு, அவர்களை அதர்மத்தில் ஆழ்த்திவிட்டது. தர்மத்தை மறந்து, அவரவர்களுக்குத் தோன்றும் கீழ்த்தரமான சிந்தனைக்கேற்ப வாழும் அற்பர்கள், இந்த உலகிலுள்ள, தாற்காலிகமான, மிகவும் துன்பத்தை விளைவிக்கும் எல்லாப் புலனின்பங்களையும் தேடி அலைந்து, அனுபவித்து ஆயுளைக் கடத்துகின்றனர்.

அவர்களுக்கு வாழ்க்கையின் மேலான குறிக்கோளைப் பற்றி எந்தவிதமான சிந்தனையும் இருப்பதில்லை. ஆகவே சுகர், பரீக்ஷித்தைப் போன்ற ஒரு புண்ணிய ஆத்மாவாகவும், இவ்வுலக சுகங்களைத் துறந்து, வாழ்க்கையின் குறிக்கோளை அறிய ஆவலாகவும் உள்ளவரே, இத்தகைய கேள்வியைக் கேட்க முடியுமென்கிறார். இதன் மூலம், தவறான பழக்கவழக்கங்களும், ஒழுக்கமற்ற வாழ்க்கையுமே பொதுவாக மக்களிடம் பரவியிருப்பதை குறிப்பால் உணர்த்தி, அதைத் தவிர்க்க வேண்டும் என்பதையே சுகர் மேற்கண்ட உரையாடல் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

ஒருவருக்கு இளவயதில் வைரக்கியமும் ஞானமும் இல்லாவிட்டாலும், வயோதிகத்திலாவது அவற்றை அடைய வேண்டும். மரணம் என்ற ஒரு நிலை உண்டு, அது தன்னை விழுங்கக் காத்துக் கொண்டிருக்கிறது என்ற நினைவு ஒருவருக்கு இருந்தால், வைராக்கியம் உண்டாகும். மரணப் படுக்கையில் கிடந்து தன் இறுதி மூச்சுவரைகூட ஒருவருக்கு வைராக்கியமும் துறவு மனப்பான்மையும் வரவில்லையென்றால், அவருக்கு இப்பிறவி வீணாகிவிட்டது என்பதைத் தவிர வேறு ஒன்றும் கூறுவதற்கில்லை.

சரியான தருணத்தில் பரீக்ஷித்து இந்த உலகை விட்டு விலகி, மரணம் வரை உண்ணாவிரதம் ஏற்றுக் கொண்டிருப்பதை சுகர் பாராட்டி, மற்றவர்களும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறார். எப்பொழுது வைராக்கியம் வந்ததோ அப்பொழுதே வீட்டை விட்டு வெளியே சென்றுவிட வேண்டும். வீடு என்பது ஸம்ஸாரத்தின் (சோக மோகாதிகளின்) விளைநிலமேயாகும். அதனால் அங்கிருந்தால் மரணரூபமாகிய ஸம்ஸாரத்தை வளர்க்கத்தான் முடியுமே தவிர, ஒருக்காலும் அழிக்க முடியாது.

ஸந்தானம், ஸம்பத்து என்ற இவையிரண்டும் ஸம்ஸாரத்தின் முக்கிய விதைகளாகும். அங்கிருந்துதான் ஸம்ஸார விருக்ஷம் கிளைத்து வளர்ந்து படர்கிறது. வீடுதானே ஸந்தான ஸம்பத்துக்களின் உறைவிடம்? அதனால் அங்கேயிருந்துகொண்டு ஸம்ஸாரத்தை வெல்வதென்பது மிகவும் கடினம்.

வைராக்கியம் உண்டாகும் விதத்தில் இல்லத்தில் இருக்க வேண்டும். விவேகிகள் அப்படித்தான் செய்வார்கள். வைராக்கியம் உண்டாகிவிட்ட பின்பு, வெளியே சென்று, ஒரு புனிதமான, ஆன்மிக வாழ்க்கை வாழத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தீர்த்தக் கரையிலோ, புனிதமான ஆச்ரமத்திலோ, ஆளரவமற்ற வனத்திலோ

வாழ்வது நல்லது. யாருடனும் சேராமல் தனித்து வாழ்வது நலம். அங்கிருந்துகொண்டு சமாதிநிலை பழக வேண்டும்.

சுத்தமாகவும், தனிமையாகவும் உள்ள இடத்தில், சரியான முறையில், தான் கற்ற ஆசனத்தில் நீண்டு, நிமிர்ந்து, அசையாமல் அமர வேண்டும். பின்னர், இந்திரியங்களை விஷயங்களிலிருந்து முழுவதும் திருப்பி, ப்ராணன் நிச்சலனம் ஆகும்போது, மனமும் புத்தியும் சலனமற்று அப்படியே நிலைநின்று போகும். அப்பொழுது மனம், புத்தி, இந்திரியங்கள் எனும் எல்லா உபாதிகளையும் விட்டு விடுதலையான ஜீவன், பிரணவ நாதத்தின் மூலம் (பிரணவ நாதத்துடன் கூடி) ஈச்வரனை அடைய முடியும். இவ்வாறு உபாதிகளின் தொடர்புவிட்டு ஜீவனும் ஈச்வரனும் ஒன்றாகச் சேர்வதுதான் ஸமாதி.

ஆனால் ஜீவனுடன் ஒன்றிக் கலந்துவிட்ட, தொடரும் வாஸனைகள், அவனை விட்டு முழுவதும் போகாமல் அணுவளவேனும் அவனிடம் இருக்கும் பட்சத்தில், ஈச்வரனிடமிருந்து ஜீவன் பிரிந்து, மீண்டும் உபாதிகளில் லயிக்கும். இவ்வாறு ஜீவனின் மனம் ஸமாதியிலிருந்து, ஸம்ஸாரத்திற்கு வருகிறது. இவ்வாறு பலமுறை ஜீவன் உபாதிகளிலிருந்து ஈச்வரனிடமும், பின்பு ஈச்வரனிடமிருந்து உபாதிகளிடமும் வந்து போய்க் கொண்டிருக்கும்போது வாஸனைகள் முழுவதும் நசித்துவிடும். அப்போது ஜீவன் ஈச்வரனிடமிருந்து விலகாத, நிலையான ஐக்யம் ஏற்படும்.

வாஸனைகள் இல்லாததால், ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வராத, நிர்விகல்ப நிலையிலிருந்துகொண்டு, அவரறியாமல் சரீரம் விட்டுப் போகும்போது, மரணரூபமாகிய ஸம்ஸாரத்தின் மறுகரையிலுள்ள, மாறாத, வேறுபாடற்ற ஜீவனை (இப்போது பிரம்மத்தை) மரணம் தீண்ட முடியாது.

இதுதான் மரணத்தை வெல்ல ஒரே வழி. ஆனால் இந்த அனுபவத்திற்கு ஸாதகமான சூழ்நிலையை, முடியும் போதெல்லாம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது, மரணம் வந்துவிட்ட பின் ஒருவர் என்ன செய்ய முடியும்? அதனால், முதலிலேயே பகவானுடைய அவதார ரூபங்களிலும், பின்பு ஸகுணமாகிய விராட் ரூபத்திலும், தாரணை மூலம் மனதை நிறுத்தி, மனதின் ஒருமித்த நிலையையும், ஸம்ஸாரத்தினின்று விடுதலையையும் அடைய வேண்டும்.

பகவானின் அவதாரங்கள் எத்தனை என்றும், அவற்றை எந்தக் காரணங்களுக்காக பகவான் எடுத்தார் என்றும் பரீக்ஷித்து, சுகரிடம் கேட்கிறார். பகவானுடைய அவதாரங்களில் முக்கியமான 22 அவதாரங்களை சுகர் வர்ணிக்கிறார். ஒவ்வொரு அவதாரமும், ஸத்யமான ஆத்ம தர்மத்தை(?) பிரகடனம் செய்யவும், ஜீவனைக் கடைத்தேற்றுவதற்காகவும் மட்டுமே என்று சுகர் நிலைநிறுத்துகிறார்.

இவ்விதம் பகவான் பலமுறை அவதரித்தும்கூட, ஜீவன் அஞ்ஞானத்திலும், அதர்மத்திலும் உழலுவது அற்புதமான மாயா சக்தியையே சுட்டிக் காட்டுகிறது. பகவானுடைய அவதார ஸ்வரூபங்களையும், லீலைகளையும் மனிதன் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதை சுகர் விளக்கினார்.

பரீக்ஷித்து மறுபடியும், அற்புதமான இவ்வுலகம் எவ்விதமுண்டாயிற்று என்று சுகரைக் கேட்டார். மிகவும் ஆழமானதும், சுவாரஸ்யமானதுமான இந்தக் கேள்விக்குப் பதிலாக, சுகர் பிரம்மாவுக்கும் நாரதருக்குமிடையே நடந்த ஸம்பாஷணையை விவரிக்கிறார்.

நாரதர், தன் தந்தையும், குருவுமான ப்ரம்மாவை அணுகி, இதே கேள்வியைக் கேட்டபோது, ப்ரம்மா இந்த உலகத்தின் நிமித்த காரணமும், உபாதான காரணமும்

(அறிவுக் காரணமும் பொருள் காரணமும்) பகவான் மட்டுமே என்று கூறினார். இவ்வுலகைப் பகுத்தறிவினால் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அதன் ஒவ்வொரு பாகமும் ஜடம் (திரவ்வியம் matter), காரியம் (action), காலம் (time), இயல்பு (ஸ்வபாவம்), ஜீவன் என்ற ஐந்து விஷயங்களைக் கொண்டதாக உள்ளது.

திரவ்வியம் என்றால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் என்பவையாகும். காரியம் என்பது மேற்கூறிய ஐந்தும் சேர்வதும், பிரிவதுமாகும். ஜடங்களாகிய ஐம்பூதங்கள் சேர்ந்து பிரிய வேண்டுமென்றால் அசைவும் உண்டாக வேண்டும். ஜடமாகவும், அசைவற்றும் இருக்கும் ஐம்பூதங்களும், எது வியாபித்திருப்பதால் அசையாமலிருக்க முடிகிறதோ, அது காலம் என்பதாகும்.

அந்த ஐம்பூதங்களின் கட்டுக்கடங்காத, முடிவில்லாத சேர்க்கையும் பிரிவும்தான் இயல்பு எனப்படுவது. அந்தத் தனிப்பட்ட மாற்றங்களில் ஆழ்ந்து அனுபவிப்பவனுமாகிய அஹங்காரம்தான் ஜீவன். இவ்விதம் ஐந்து பாகங்களின் சேர்க்கைதான் இவ்வுலகம்.

இவையுடன் சேர்ந்துதான் கோடானுகோடி பொருட்களும், உயிரினங்களும். இவ்வுலகில் இருப்பனவும், மறைவனவும் அப்படியென்றால் பொருட்களின் ஐந்து பாகங்களும் ஈச்வரனிடமிருந்து தோன்றியவையே அன்றி வேறில்லை. மாறுதல் இல்லாத, முழுமையான (பூர்ணமான) ஈச்வரன் மட்டுமே திரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவன் என்று ஐந்து உருவங்களிலும் பிரதிபலித்து, இவ்வுலகமாக விளங்குகிறது என்பதுதான் பரமஸத்யம்.

மண்ணிலிருந்து குடம், பானை என்று பலவிதமாகக் காண்பது போலவும், சமுத்திர ஜலம் நீராவியாகவும் மழையாகவும் குளத்து நீராகவும் நீரோடையாகவும் மற்ற பலரூபமாகவும் காணப்படுவதுபோல, இரண்டற்றதும், ஒன்றேயுமான ஈச்வரன்தான் உலகமாகக் காட்சியளிக்கிறார்.

அணுவைவிடச் சிறிதாகவும், மஹத்தைக் காட்டிலும் பெரியதாகவும் உள்ள ஈச்வரனே முன்சொல்லப்பட்ட ஐந்துவிதமான ரூபத்தில் (திரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவன்) இருப்பதால், அவை ஒவ்வொன்றும், அணுவின் அணுவும், மஹத்தின் மஹத்தும் ஆகும்.

இவ்விதம் ஈச்வரனைத் தவிர வேறொன்றுமில்லையென்பதால், எல்லாக் கர்மங்களும், யஜ்ஞங்களும், தவங்களும், யோகங்களும், ஞானங்களும் நாராயணனே என்று வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது. எல்லா ஜீவன்களின் இலக்கும், எல்லோருக்கும் உள்ளே உறைபவனும், வாஸுதேவனுமாகிய ஈச்வரன்தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

வர்ணங்கள், ஆச்ரமங்கள், தர்மங்கள், சாஸ்த்ரங்கள், வித்தைகள் ஆகிய அனைத்தும் ஹிரண்யகர்ப்பரான நாராயணனிடமிருந்து உண்டாயின என வேதங்கள் போற்றுகின்றன. அவை யாவையும் அந்த ஈச்வரனைத் தொழுவதற்கான உபகரணங்களேயாகும்.

மேலும், பிரம்மா நாரதரிடம், ஜனங்கள் இவ்வுலகத்தில் தன்னை ஸ்ருஷ்டி கர்த்தாவென்றும், ஸ்வயம்பு என்றும் எல்லாவற்றிற்கும் தானே மூல காரணமென்றும் மற்றும் பலவாறு போற்றினாலும், அவருள்ளும் அவரைப் போற்றும் மற்றவருள்ளும், அவரால் படைக்கப்பட்டதென்று சொல்லப்படும் வஸ்துக்களுள்ளும், ஜீவர்களுள்ளும் ஒரே ஈச்வரன்தான் நிறைந்துள்ளார். புழு, பூச்சி முதலிய சிறிய ஜந்துக்களிலும்,

அசையாத தாவரங்களிலும், பறவைகள், மிருகங்களிலும், மனிதர்கள் தேவர்கள் முதலான உயர்ந்த ஜீவர்களிலும், எந்த ஒரு சைதன்யம் மட்டுமே நிறைந்து அவற்றை ஒளிர்விக்கின்றதோ, அதே அற்புதமான ஈச்வர சைதன்யம் மட்டுமே தன்னிலும் நிறைந்திருப்பதால், எல்லாவற்றிலும் மேலானதாகப் பெருமைப்படுத்தப்பட்ட தனக்கும், கீழ்ப்பிறவியென்று கூறப்படும் ஒரு புழுவிற்கும் எந்த வேற்றுமையுமில்லை என்கிறார்.

அந்தப் பரமபுருஷனின் அநுக்ரஹத்தால், எல்லா ஸ்ருஷ்டிகளும் உயர்ந்தவையாகவும், சக்தி உள்ளவையாகவும் ஆகின்றன. அதற்கு மாறாக, அந்த அருள் இல்லாதபோது, அவையெல்லாம் சக்தியற்றும், தாழ்ந்தும் போகின்றன.

மேற்கொண்டு பிரம்மா, நான் ஒரு முறை அந்தப் பரமேச்வரனை பூஜை செய்வதற்காக, பலவிதமான ஸாமக்ரியைகளையும் சேகரித்து அவற்றைச் சரிபார்க்கும்போது, அவையெல்லாம் ஈச்வரமயமாக இருப்பதைக் கண்டேன். ஈச்வரனைத் தவிர வேறொன்றும் இவ்வுலகில் இல்லை என்பதை முழுமையாக அறிந்தேன். அன்று முதல் என்னுடைய எண்ணங்கள், வாக்கு, செயல் ஆகிய மூன்று கரணங்களும் அந்த ஈச்வரனை மட்டுமே சார்ந்தும், வேறொன்றையும் சாராமலும் இருக்கத் தொடங்கின. உற்சாகத்துடன் எப்பொழுதும் பகவானை மாத்திரம் நான் இதயத்தில் இருத்திக் கொண்டிருக்கிறேன். அதனால் என்னை எந்தவிதமான குழப்பமோ அஞ்ஞானமோ துன்பமோ தொந்தரவு செய்வதில்லை. இவ்விதம் செய்பவர் அனைவருக்கும் ஸம்ஸாரத்தினின்று யாதொரு துன்பமும் நேராது. அதனால் நீங்களும் அதேபோல் செய்ய வேண்டும். ஈச்வரனின் மகிமையை மட்டுமே போற்ற வேண்டும், அனுபவிக்கவும் வேண்டும். அதனிலேயே திளைத்து, அதனிலேயே உயிர் வாழ வேண்டும். இப்படியிருந்தால், ஸம்ஸாரத்தின் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வராது என்று கூறி முடித்தார்.

பின்பு நாரதர் பிரம்மதேவனிடமிருந்து கேட்ட ஈச்வர மகிமையை, வியாஸ மஹரிஷிக்கு சுருக்கமாக உபதேசிக்கிறார். அதைத்தான் ஸ்ரீவியாஸ மஹரிஷி, விரிவாக பாகவதம் என்ற பெயரில், ஸ்ருஷ்டி, ஸர்கம், விஸர்கம், ஸ்தானம், போஷணம், ஊதிகள் மன்வந்திரக் கதைகள், ஈச்வரக் கதைகள், நிரோதம், முக்தி, ஆச்ரயம் என்ற பத்து விஷயங்களாக விவரித்துக் கூறியிருக்கிறார்.

ஸ்ருஷ்டி என்பது உலகத்தின் உற்பத்தியைப் பற்றியது. அதன் அழிவை விஸர்க்கமென்றும், அதன் இருப்பு நிலையை ஸ்தானமென்றும் கூறுகின்றனர். உலகின் வளர்ச்சியும் பரிணாமுமே போஷணம் எனப்படுவது. கர்ம வாஸனைகளும் அவற்றின் சக்தியுமே ஊதி எனப்படுவது. காலத்தின் அதிபதிகளான 16 மனுக்களின் சரித்திரம் மன்வந்திரத்தில் அடங்கும். பல்வேறு காலகட்டங்களிலும் பிறந்து வாழ்ந்த அரசர்களின் சரித்திரமும், அவர்களின் வம்சத்தின் வரலாறுமே ஈச்வரக் கதைகளில் கூறப்பட்டுள்ளன. ஆத்ம ஞானம் அல்லது ஈச்வர ஸாக்ஷாத்காரத்திற்கு தடையாக உள்ள அஹங்காரத்தின் பலவிதமான வெளிப்பாடுகளை அகற்றும் வழியை நிரோதமென்ற தலைப்பில் விளக்கி, ஜீவன் ஈச்வர ஸாக்ஷாத்காரத்தின் மூலமாக அடையும் கைவல்ய ப்ராப்திக்குண்டான வழியை முக்திளென்றும் விவரித்திருக்கிறார். ஸர்வாதாரமான கைவல்ய அனுபூதியை ஆச்ரயம் என்று பத்தாவதாகப் போற்றுகிறார். இந்த, மேற்கூறிய பத்து விஷயங்களைப் பற்றியதுதான் பாகவதம் என்பதை 12 வது பாகத்தில் கூறிமுடிக்கிறார் வியாஸர்.

இந்த பாகவதத்தைக் கேட்பவர்களின் லக்ஷணத்தை எடுத்துக் கூறுவதுான் இரண்டாவது ஸ்கந்தத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் என்பது ஹரிலீலாம்ருதம் என்ற நூலிலிருந்து தெரிகிறது. பாகவதத்தைக் கேட்பவர் தீவிர வைராக்கியத்துடன், ஸம்ஸாரத்தைவிட்டு முழுவதும் விலகிய ஒரு முமுக்ஷுவாக இருக்க வேண்டும். வைராக்கியம் உண்டாகவும், ஸம்ஸாரத்தினின்று விடுபடுவதற்கும்தான் இந்த உலகம் வர்ணிக்கப்பட்டுள்ளது என்பது அந்த நூலாசிரியரின் கருத்து.

எதுவானாலும் கேட்பவர் விரக்தி உண்டானவரும், முமுக்ஷுவாகவும் இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து ஒன்றுமில்லை.

மூன்றாவது ஸ்கந்தம் முதல் 12 வது ஸ்கந்தம் வரை உள்ளவை, மேற்கூறிய 10 விஷயங்களை விவரிக்க வேண்டியே எழுந்துள்ளன என்பதை அன்னாருடைய கருத்து.

அத்ர ஸர்கோ விஸர்கஶ்ச ஸ்தானம் போஷணம் ஊதய:

மந்வந்தர அஶேஷானுகதா நிரோதோ முக்திராஶ்ரய:

தஶமஶ்ச விஶ்ரத்யர்த்தம் நவாநாமிஹ கீர்த்தநம்।।

என்ற பாகவத ச்லோகத்திலிருந்து ஸர்கம் பத்து விஷயங்களைத்தான் சொல்லத் தொடங்கியதென்றும், அதில் பத்தாவதான ஆச்ரயம்தான் மிகவும் முக்கியமானதென்றும், அதனை அறிந்துகொள்ளத்தான் மீதி ஒன்பது விஷயங்கள் போற்றப்பட்டிருக்கிறதென்றும் ஹரி லீலாம்ருதம் எழுதிய முதியவரின் கருத்து என்பது தெரிகிறது.

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

மூன்றாம் நான்காம் ஸ்கந்தங்கள் விதுரருக்கும் மைத்ரேயருக்கும் இடையில் நடந்த ஆழமான, அழகிய நிறைவான கருத்துப் பரிமாற்றங்களை விவரிக்கின்றன. மூன்றாம் ஸ்கந்தத்தில் ஸ்ருஷ்டியும், நான்காம் ஸ்கந்தத்தில் லயமும் வர்ணிக்கப்பட்டுள்ளன. வேறு மற்ற விஷயங்களும் ஸம்பாஷணை மூலம் கூறப்பட்டுள்ளன. அதனுடைய பூர்வபீடிகையாகவேதான், விதுரரும் மைத்ரேய மஹரிஷியும் சந்திக்க நேர்ந்த காரணங்கள் சென்ற அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன.

மாண்டூக்ய மஹரிஷியின் சாபத்தினால், பிறவியில் சூத்திரராகப் பிறந்த தர்மராஜாதான் விதுரர். அவர் குழந்தைப் பிராயத்திலிருந்தே பரம பக்தனாகவும், நியம நிஷ்டையுடன் கூடியவராகவும் இருந்தார். பிறவியில் சூத்திரரானாலும், வியாஸ மஹரிஷியின் புத்திரரான காரணத்தினால், உத்தம க்ஷத்திரியர்களான திருதராஷ்டிரனுக்கும் பாண்டுவிற்கும் இளைய சகோதரராகவும், அவர்களின் புத்திரர்களுக்குச் சிறிய தந்தையாகவும் இருந்தார்.

காட்டில் இறந்த பாண்டுவின் மனைவி குந்தியையும், சிறுவர்களாகிய பாண்டவர்களையும் ஆதரவுடன் அரவணைத்து, அரண்மனைக்குக் கூட்டிவந்து தங்க வைத்தது முதல், கௌரவர்கள் அவரிடம் விரோதம் பாராட்ட ஆரம்பித்தனர். தயாசீலனும், தர்ம நிஷ்டருமாகிய விதுரரின் இதயம் அப்பொழுதுமுதல் தாளாத துன்பத்தில் உழல ஆரம்பித்தது. அதர்ம மார்க்கத்தில் செல்லும் துரியோதனாதிகளின் ஒவ்வொரு செயலையும் கவனித்து, விதுரர் திருதராஷ்டிரரிடம் அவற்றைப் பற்றிய குறைநிறைகளை அவ்வப்போது எடுத்துரைப்பதுண்டு.

ஆனால் அகக்கண்ணும் குருடான திருதராஷ்டிரனுடைய இதயத்தில் விதுரர் கூறிய எந்த தர்ம உபதேசங்களும் புகவில்லை. ஆனாலும், அதர்மம் நிறைந்த அவர்களுடைய ஆட்சியினால் ராஜ்யமும், அவர்களுடைய வம்சமும் நாசமடையப் போவதை விதுரர் பலமுறை சுட்டிக்காட்டத் தவறியதில்லை.

துரியோதனனை மட்டும் புறக்கணித்தால், மற்ற புத்திரர்களையும் ராஜ்ஜியத்தையும் காப்பாற்ற முடியும். அதனால் அவனைப் புறக்கணிப்பது தர்மமே என்றும் விதுரர் பலமுறை வாதித்ததுண்டு. பெரிய நன்மைக்காக சிறியதைப் புறக்கணிப்பதும், பலவற்றிற்காக ஒன்றை விடுவதும் நியாயமே என்ற நீதியையும் அவர் எடுத்துக்காட்டாமலிருந்ததில்லை.

ஆனால் அதனால் விசேஷமான பலன் ஒன்றுமில்லாதது மட்டுமல்லாமல், துரியோதனாதிகளுடைய கடுமையான வெறுப்பிற்குப் பாத்திரமாகிவிட்டார் விதுரர். என்றாலும், ஒவ்வொரு முறை அநீதி நடக்கும்போதும் தான் என்ன சொல்ல வேண்டுமோ, அதை விடாமல் சொல்லி வந்தார். கௌரவர்களின் சூழ்ச்சியால் பாண்டவர்களுக்கு ஆபத்து வராமல் காப்பாற்றவும் முயற்சி செய்தார்.

இதுபோன்ற பொறுக்க முடியாத பல கட்டங்கள், முடிவில் பாரத யுத்தத்தின் எல்லைக்குக் கொண்டுவிட்டன. இருதரப்பினரும் யுத்தம் செய்வதென்ற தீர்மானத்திற்கு வந்ததன் விளைவாக, போரின் நன்மை தீமைகளைப் பற்றிய சர்ச்சைகளும் தொடங்கின. இந்தக் கட்டத்தில், யுத்தத்தைப் பற்றி ஆலோசிக்க திருதராஷ்டிரர் விதுரரை அழைத்தார். அப்பொழுது விதுரரின் விரிவான உரை, ஆழ்ந்த

தர்ம உபதேசமாகவும், நீதியின் விளக்கமாகவும் வெளிப்பட்டு, விதுர நீதியென்று இன்றுவரை அறியப்படுகிறது.

அதன் முடிவில் துரியோதனனைப் புறக்கணித்ததால் மட்டுமே நீதியை நிலைநாட்ட முடியுமென்றும், ராஜ்யத்தையும் வம்சத்தையும் நிலைநிறுத்த முடியுமென்றும் ஆரம்பத்திலிருந்தே தாம் கூறி வந்ததை விதுரர் வெளிப்படுத்தினார். துர்பபாக்கியவாசமாக, அதைக் கேட்டுக்கொண்டே உள்ளே வந்த துரியோதனன் கோபத்திலும் வெறுப்பிலும் கொந்தளித்து விதுரரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறினான். மனம் நொந்த விதுரர், புண்ணிய க்ஷேத்திரங்களையும், தீர்த்தங்களையும் காண பாதயாத்திரை மேற்கொண்டு செல்லும்போது, வழியில் உத்தவரைக் கண்டார். அவரிடமிருந்து நடந்து முடிந்த பாரதப் போரின் முடிவையும், கௌரவர்களின் அழிவையும், பாண்டவர்கள் நாட்டை ஆள்வதைப் பற்றியும், யாதவ வம்சத்தின் அழிவையும், துவாரகையின் மறைவையும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஸ்வர்காரோகணமும் பற்றி விதுரர் தெரிந்துகொண்டார்.

பகவானிடமே உபதேசம் பெற்ற உத்தவர், பதரிகாச்ரமத்திற்கு தவம் செய்யப் போவதைக் கேட்ட விதுரர், உத்தவரிடம், அவர் பெற்ற ஞானத்தைத் தனக்கும் அளிக்குமாறும், தானும் தவம் செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிராரப்த ஸ்வரூபமாகிய இவ்வுலக வாழ்க்கை யாருக்கும் எப்பொழுதும் சுகம் தருவதில்லை என்பதையும், ஸம்ஸாரத்தில் எந்த நிலையும் ஒரு நொடிக்கு மாத்திரமே என்றும், பெரும்பாலும் துன்பம் நிறைந்ததேயென்பதையும் அவர் கண்டிருந்தார். ஆனால் உத்தவர் அதற்கு சம்மதிக்கவில்லை. பகவான் ஏற்கெனவே மைத்ரேய மஹரிஷியிடம் விதுரருக்கு ஞானம் உபதேசிக்கும் பொறுப்பை அளித்திருப்பதாகவும், அதனால் அவரை அணுகித் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் விதுரர் தெரிந்து கொள்ளலாமென்றும் உத்தவர் கூறினார்.

அதன்படி, பாவன ஸ்வரூபிணியான பாகீரதியின் புண்ணிய தீரத்தில் உள்ள மைத்ரேய மஹரிஷியின் ஆச்ரமத்திற்கு சென்ற விதுரரை, மஹரிஷி முறைப்படி உபதேசித்தார். பின்பு விதுரரின் பக்தி, விநயம், பெருந்தன்மை முதலியவற்றைக் கண்டதும் அவர் உயர்ந்த ஞானத்தைப் பெறத் தகுதியுள்ளவர் என்பதைப் புரிந்துகொண்டு, தெரிந்துகொள்ள வேண்டியதைக் கேட்க, விதுரருக்கு மஹரிஷி அனுமதியளித்தார். விதுரரும் கேள்வி கேட்கத் துவங்கினார்.

எல்லோரும் சுகத்திற்காகவே முயற்சிக்கிறார்கள். முயற்சிக்காமல் ஒருவரும் இருப்பதில்லை. இருந்தும் முயற்சிக்கிறவர்களில் யாருக்குமே சுகம் கிடைப்பதாகத் தெரிவதில்லை.

அதோடு **சுகத்திற்காக முயல்பவர்களுக்கு சுகம் கிடைப்பதில்லை என்பதோடு, எப்பொழுதும் துக்கமே கிட்டுகிறது. ஆனாலும் சுகத்திற்கான முயற்சியை யாரும் விடுவதில்லை என்பது ஒரு மாபெரும் விந்தை.** ஏன் இப்படி உள்ளது என்பதே விதுரரின் முதல் கேள்வி.

அதற்கு மைத்ரேய மஹரிஷி பின்வருமாறு பதில் கூறுகிறார். சூக்ஷ்மமான பஞ்சபூதங்களின் பரிணாமத்தின் விளைவே மனம். எனவே அது ஸத்யமாக இருக்க முடியாது. மனதே ஸத்யமில்லை எனும்போது, அதன் பரிணாமங்களான விகாரங்களும், விசாரங்களும் (உணர்ச்சிகளும், எண்ணங்களும்) ஸத்தியமாக (உண்மையாக) இருக்க முடியாது. எண்ணங்களே வார்த்தைகளாகவும், செயல்களாகவும் வடிவெடுத்து, பின் வாழ்க்கையில் அனுபவங்களாக மாறுகின்றன. கர்மங்கள் துக்க ஸ்வரூபமாக

இருக்கும்போது, அதன் பரிணாமமாகின்ற அனுபவங்களும் துக்கமாகவே இருக்கும், சுகமாக இருக்காது என்பதை ஊகித்துக் கொள்ளலாமல்லவா?

அஸத்யமான மனதின் மூலம் உதிக்கும் பொய்யான எண்ணங்கள், செயல்கள் எல்லாம் உண்மையென தவறாகப் புரிந்துகொண்டு உண்மையில்லாத விஷயங்களில் பித்துப் பிடித்து, சுகத்திற்காக அலைந்துகொண்டிருக்கும் மனிதனுடைய பொய்யான அறிவைக் குழிதோண்டி புதைத்து, ஸத்யத்தை போதனை செய்து, சுகத்திற்கான வழியைக் காட்டும் கருவிகளே வேத சாஸ்த்ரங்கள்.

குருமுகமாக வேத சாஸ்த்ரங்களை நன்கு அப்யாஸம் செய்து, ஸத்யத்தைப் புரிந்துகொண்டு, வாழ்க்கையைப் புனிதமாக்கிக்கொண்ட சான்றோர்கள் சுகத்தை அனுபவிக்கிறார்கள். மற்றவர்கள் இகத்திலும் பரத்திலும் துக்கத்தையே அனுபவிக்கிறார்கள்.

பண்பாட்டிலும், அறிவிலும் சிறந்து விளங்குபவர்கள், வடிகட்டின முட்டாள்கள் ஆகிய இரண்டு தரப்பினர் மட்டுமே உலகில் சுகத்தை அனுபவிக்கிறார்கள். இந்த இருதரப்பினருக்கும் இடையே உள்ளவர்கள் அனைவரும் துக்கத்தையே அனுபவிக்கிறார்கள்.

எக்காலத்திலாயினும், ஜனத்தொகையில், துக்கப்படும் இடையிலுள்ளவர்களே அதிகம். இவர்கள், பண்பாட்டையும் வாழ்க்கையையும் மேம்படுத்த வேதங்களையும் நன்கு கற்று, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும், இந்த உலகமும், மனித வாழ்க்கையும் சுகம் அனுபவிக்கவேயன்றி, துக்கப்படுவதற்காக அல்ல. சுகமும் துக்கமும் விஷயங்களைச் சார்ந்தது அல்ல. பண்பாட்டையே அடித்தளமாகக் கொண்டது. அதனால் உடலையும், அதனைச் சார்ந்த செயல்களையும் முன்னிறுத்தி வாழும் மூட வாழ்க்கைமுறையை முற்றிலும் ஒழிக்க (துறக்க) வேண்டும். சரீரத்தை மறந்து, ஆன்மாவிற்காக வாழத் துவங்க வேண்டும். பன்மையை விட்டு ஒருமையை நாட வேண்டும். சுயநலமின்றி பற்றற்று உபாதி ரஹிதனாக வாழ வேண்டும். இவ்வாறு சுகமாக வாழ்க்கையை நடத்தும் நல்லோரின் இடையறாச் சேர்க்கையால் சுலபமாக, சுகமாக வாழலாம் என்று கூறினார்.

தத்துவமாக இதுவரை பேசிக்கொண்டிருந்த மைத்ரேய மஹரிஷியிடம் விதுரர் மரியாதையுடன், உலகம் எவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்பதை விவரமாக அறிய வேண்டுமென்ற விருப்பம் தனக்குள்ளதென தெரிவித்தார்.

ஸர்வஜ்ஞனான அந்த மஹாத்மா மேலும் கூறலானார். ஹே விதுர! இல்லாத ஒரு பொருளை உள்ளதாக நினைத்துக்கொண்டு, அந்த வஸ்து உண்டாவதற்கு எது காரணமென்று ஆராய்ச்சி செய்யும் விவேகமற்ற பாலகன் கேட்பதுபோன்று உள்ளது உங்களது கேள்வி.

ஜாக்ரத் முதலிய மூன்று அவஸ்தைகளிலும் மாறிக்கொண்டேயிருக்கும் உலகத்தினுடைய எந்த நிலையில்தான் ஸத்யம் (உண்மை) உள்ளது! அது வெறும் தோற்றமே! காலத்தினாலும், தேசத்தினாலும், கர்மத்தினாலும், அவஸ்தைகளாலும் (நிலைகளாலும்), ஒவ்வொரு நிமிஷமும் மாறுவதும், தோன்றுவதும், மறைவதுமாக விளையாடிக் கொண்டிருக்கும் இவ்வுலகமெனும் தோற்றத்தின் இருப்பைப் பற்றி ஆராய்வதால் எதைத் தெரிந்துகொள்ள முடியும்? இல்லாத பூதத்தை இருக்கிறது என்று ஸங்கல்பித்துப் பயந்து நடுங்கும் ஒருவன், அந்த பூதத்தைத் தேடியலைந்தால் காண முடியுமா? இருப்பு இல்லாததுதான் இவ்வுலகம், மனதின் கற்பனை மாத்திரமே!

சொப்பனத்தில் காணும் பொருட்களும் அனுபவங்களும் எவ்வாறு உண்மையல்லவோ அவ்வாறே விழிப்பு நிலையில் காணப்படும் இப்பிரபஞ்சம் மூன்று அவஸ்தைகளிலும் (விழிப்பு, கனவு, உறக்கம்) இல்லாத ஒன்று என்பதே உண்மை. அவ்வாறிருந்தும் உலகம் உண்மையென்று நம்பிக்கொண்டிருக்கின்றனர் அறிவில்லாதவர். அதே சமயம் உலகம் இல்லாத ஒன்றென உறுதியாகக் கூறுபவர்களும் உள்ளனர். அவர்கள் இம்மாதிரி கூறுவதற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? என்று கூறி மைத்ரேயர் மேலும் விளக்கலானார்.

நிர்விகல்பமும் அவ்யக்த பரிபூர்ணமும், சச்சிதானந்த ரூபமும் ஆன பர சைதன்யத்தின் இச்சையால் அதனின்று ப்ரக்ருதி தோன்றியுள்ளாள். இல்லாத ஒரு பொருளைத் தோன்றியது எனக் கூறும்போது முரண்பாடாகத் தோன்றலாம். மேற்கூறப்பட்ட பரசைதன்யத்தின் ஓர் அங்கமே ப்ரக்ருதி என்பதுதான் அதன் அர்த்தம். ப்ரக்ருதியிலிருந்து, எல்லாவற்றிற்கும் காரணமும், பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்களின் பீஜத்தை (மூலப்பொருளை)யும் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளதுமான மஹத்தத்வமும், மஹத் தத்வத்திலிருந்து எல்லாச் செயல்களுக்கும் காரணமாயுள்ள அஹம் தத்வமும் தோன்றியுள்ளன. அஹங்காரத்திலிருந்து ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் மூன்று குணங்களும் உண்டாயின. வேறுபட்ட, மேற்கூறிய மூன்று குணங்கள் ஒன்றோடொன்று சேர்வதனால் அஹங்காரம் மூன்றுவிதமான உருவம் (ஸத்வகுண அஹங்காரம், ரஜோகுண அஹங்காரம், தமோகுண அஹங்காரம்) எடுத்துள்ளது.

தொடர்ந்து ஸத்வ குண அஹங்காரத்திலிருந்து விஜ்ஞான ஸ்வரூபமும், மனஸ், சித்தம், புத்தி, அஹங்காரமெனும் நான்கு பாவத்துடனான அந்தக்கரணமும் உண்டாயிற்று. ரஜோகுண அஹங்காரத்திலிருந்து ஞானங்களும், கர்மமயங்களுமான பத்து இந்த்ரிய சக்திகள் உருவெடுத்தன. தமோ குண அஹங்காரத்திலிருந்து பஞ்சபூதங்களின் ஸூக்ஷ்ம தன்மாத்திரைகளான சப்தம் முதலிய ஐந்து விஷயங்கள் உண்டாயின. அவை மேலும் ஸ்தூலமானபோது பூமி முதலிய பஞ்ச பூதங்களும் உண்டாயின.

இதைத் தொடர்ந்து ப்ரக்ருதியில் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த முன்கூறப்பட்ட தத்துவங்களின் பகுதிகளைக் காலம் என்னும் சக்தி அசைத்து ஒன்றோடொன்று சேர்த்தது. ப்ரக்ருதி, மஹத் தத்வம், அஹம் தத்வம், முக்குணங்கள், அந்தக்கரணம், பத்து இந்த்ரியங்கள், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து மஹாபூதங்கள் இவைகளையெல்லாம் உடலுறுப்புகளாக்கி உபாதியாக ஏற்றுக்கொண்டு ஈச்வரன் ஒளிர்ந்தான். இதுவரை ஜடமாக இருந்த தத்வங்கள் சைதன்யத்தின் சேர்க்கையால் செயல்புரியத் தயாராகின. இவ்வாறு செயல்புரியத் தயாராக உள்ள தத்வங்களுடன் கூடிய ஈச்வரனையே ஹிரண்யகர்ப்பன் என்றும் நாராயணன் என்றும் கூறுகின்றனர்.

நீண்டகாலம் ஹிரண்யகர்ப்பதேவன் பிரளய ஜலமாகிய வெள்ளக்காட்டில் உறங்கிக் கொண்டிருந்தார். உரிய காலம் வந்தபோது, ஈச்வர இச்சையால் அவரது நாபியில் (தொப்புளில்) இருந்து ஒரு தாமரை முளைத்து எழுந்தது. அவ்யக்தமான (இன்னதென்று புலப்படாத) உலகத்தில் முதன்முதலாக உருவத்துடன் தோன்றிய ஆதி பத்மத்திலிருந்து ஸ்வயம்புவாக ப்ரம்மதேவர் தோன்றினார்.

விசாலமான சூழலில் கேட்கவோ, பார்க்கவோ எதுவுமின்றி, ஒருவனாகப் பிறந்து, தாமரையில் இருந்த ப்ரம்மதேவன் தான் யார் என்றும், எதற்காகப் பிறந்தோம் என்றும், தனக்கு ஆதாரமான தாமரைக்கு மூலம் எது என்றும் பலகாலம் ஆராய்ந்தும் பதில்

கிடைக்காது கவலையில் மூழ்கியிருந்த தருணத்தில், ஆகாயத்திலிருந்து ஓர் அசரீரி வாக்கு, தப தப என்று ஒலித்தது. அந்த ஒலி எங்கிருந்து வந்தது, எப்படித் தோன்றியது என ஆராய்ந்தும் பலன் கிட்டவில்லை. ஒன்றுமே அவருக்குப் புரியவில்லையென்றாலும், கேட்ட அவ்வாக்கின்படி செயல்படத் தீர்மானித்தார். அதன்படி மனது, புத்தி, இந்த்ரியங்கள் இவற்றை அடக்கி ஒருமுகப்பட்டுத் தவமியற்றினார். நீண்டகால தவத்திற்குப்பின், தனக்கு ஆதாரமாக உள்ள ஹிரண்யகர்ப்ப ஸ்வரூபியான நாராயணனைத் தனக்குள்ளேளே கண்டார். வைகுண்ட மூர்த்தியும், பரமபுருஷனும், ஸர்வாலங்கார பூஷிதனும் ஆன நாராயணனின் தேஜோமயமான திவ்ய தரிசனம் கிடைத்ததும் ப்ரம்மதேவன் கவலைகள் நீங்கி ஆனந்தமடைந்தார். தானும் நாராயணனும் இரண்டல்ல (வேறல்ல) என்றும், தன்னுடைய ஆதிகாரணம் அந்தப் பரமபுருஷனேயென்றும் அறிந்துகொண்டார். இந்த ஞானம் பெற்றபின், அறிய வேண்டியதனைத்தும் அறிந்தார். அந்த ஈச்வரனின் எண்ணிலடங்காத மகிமையைப் போற்றித் துதித்தார். பகவானது அனுக்ரஹத்தினால் எல்லாவிதமான அறிவும், திறமைகளும் ப்ரம்மதேவனிடம் தானாகத் தோன்றின. அதன்மூலம் உலகத்தைப் படைப்பதற்காகவே தான் தோன்றியுள்ளதைப் புரிந்துகொண்டார். படைப்பில் ஈடுபடுவதால், தான் ஸத்யமான ஞானத்தை இழக்கக்கூடாது என இறைவனிடம் பிரார்த்தித்தார். ஸத்யத்தை மனதில் எப்பொழுதும் இருத்தி, எது செய்தாலும் ஆபத்து எதுவும் வராது என்று பகவானும் அருள்செய்தார். இதைத் தொடர்ந்து படைப்பு துவங்கியது.

பகவானுடைய ஸ்தூலமான உடம்பே இந்த பிரபஞ்சம். இதைத்தான் விராட் ஸ்வரூபம் என்று அழைக்கின்றனர். இந்த ஸ்வரூபம் ப்ரம்மதேவன் மூலமே வெளிப்பட்டது.

உலகத்தின் பலவிதமான படைப்பு பற்றி இதுவரை சொல்லப்பட்டது. தனி ஒரு ஜீவனுடைய படைப்பும் இதே ரீதியில்தான். பூமி முதலிய பஞ்ச பூதங்களும், சப்தம் முதலிய பஞ்ச தன்மாத்திரைகளும், பத்து இந்திரியங்களும், நான்கு விதத்தில் செயல்படும் அந்தக்கரணமும், ஸத்வம் முதலான மூன்று குணங்களும், அபிமானமும் (நான் எனும் எண்ணம்), விஜ்ஞானமும், ஸ்வபாவமும், ஆத்மசைதன்யமும் கூடிய ஒரு கலவைதான் ஒரு ஜீவன் அல்லது வ்யக்தி. பஞ்சபூதங்களின் அம்சமே சரீரம். தன்மாத்திரைகளின் அம்சமே உலக பதார்த்தங்களை அறிந்துகொள்ளுதல். இந்திரிய சக்தியின் அம்சமே பத்து இந்திரியங்களும். அந்தக்கரண சக்தியினுடைய அம்சமாவதே மனது, சித்தம், புத்தி, அஹங்காரம் முதலியவை.

ஸத்வ குணத்தின் அம்சமாக ஞாபக சக்தியும், தமோகுணத்தின் அம்சமாக மறதியும், ரஜஸ்ஸின் அம்சமாக செயலில் ஈடுபாடும் உள்ளது. அஹங்காரத்தின் அம்சமாக, நான், இவன் என்னும் ஸ்திரமான அபிமானமும், மஹத் தத்துவத்தின் அம்சமாக (ஆராயும் அறிவும்) விஞ்ஞானமும், ப்ரக்ருதியின் அம்சமாக ஸ்வபாவமும் (இயல்பும்), ஈச்வரனின் அம்சமாக ஆத்ம சைதன்யமும் ஜீவனில் ப்ரகாசிக்கிறது. மேற்கூறியவை சிறிய அளவில் இருக்கும்போது, வ்யக்தி (ஜீவன், பிண்டம்) என்றும், பெரிய அளவில் இருக்கும்போது ஸமஷ்டி (உலகம், அண்டம்) என்றும் அறியப்படுகிறது. சிறிது, பெரிது என்பதைத் தவிர இவற்றுக்குள் வேறு வித்தியாசங்கள் இல்லை.

பிரம்மதேவன் உலகை எவ்விதம் படைத்தான் என்பதை இனி பார்ப்போம். குயவன் மண், நீர், நெருப்பு முதலியவைகளை உபயோகித்துப் பாண்டங்களைத்

தயாரிப்பது போன்று எந்தெந்தப் பொருட்களை உபயோகித்து பிரம்மதேவன் படைத்தார்?

மனதும், மனதின் தர்மமான ஸங்கல்பமும் மாத்திரமே அவருக்கு உபகரணங்கள் ஆயின. வேறு பொருட்கள் ஏதும் இல்லை. ஏகோஹம் பஹுதா ஸ்யாம்। ஒன்றாக இருக்கும் நானே, பலவாக மாறுவேனாக என்று ப்ரம்மதேவன் செய்த ஸங்கல்பமே அவரது ஸ்ருஷ்டிக்கு உபகரணங்கள் ஆனது. இவ்வாறு ஸங்கல்பம் செய்த உடனே முதலில் நான்குபேர் உண்டானார்கள். இவர்களே ப்ரஸித்தமான ஸனகர், ஸனந்தர், ஸனாதனர், ஸனத்குமாரர் என்பவர்கள். பிரம்மன் அவர்களையும் தன்னைப்போல் ஸ்ருஷ்டி தர்மத்தை வளர்க்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்கள் அதை ஏற்றுச் செயல்படவில்லை. ஏனென்றால் ஸத்யம் என்பது ஒன்றாக இருக்கும்போது, தானாக அமைந்துள்ள இந்தப் பிறவியில் ஸத்யத்தை உணராமல் பலவற்றையும் படைப்பது மிகுந்த ஆபத்தில் கொண்டுவிடுமென்று படைப்பை ஏற்க மறுத்துவிட்டனர். தன்னுடைய புத்திரர்களும், சீடர்களுமான ஸனகாதிகள் மறுத்ததால் பிரம்மதேவனுக்குக் கோபம் மூண்டது. முதன்முதலில் தோன்றிய இந்தக் கோபமே ஸம்ஹார ருத்ரனாக உருவெடுத்தது. மீண்டும் பிரம்மதேவனின் ஸங்கல்பத்தால் ப்ரஜாபதிகளும், ரிஷிகளும் அடங்கிய பத்து பேர் அவருடைய பல்வேறு அங்கங்களிலிருந்து படைக்கப்பட்டனர். அந்தப் புத்திர்களிடமும், பிரம்மதேவன் தன் விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவர்கள் ஸனகாதியரைப் போல் ஒரேயடியாக மறுக்காமல் ஸமயம் வரும்போது, அவர்தம் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாகத் தெரிவித்தனர்.

இதன்பிறகும் பிரம்மதேவன் பலவிதமான ஸ்ருஷ்டிகளைச் செய்தார். இதனாலும் அவருக்கு நிம்மதி உண்டாக்கவில்லை. தானாகவே பலவாறாக மாறும் தன்மை அவற்றிடம் இல்லாமற்போனதே அதற்குக் காரணம். ஸ்ருஷ்டி செய்த பொருட்களின் எண்ணிக்கையில் வளர்ச்சி இருக்கவில்லை. இப்படியிருந்தால் தானில்லாமல் படைப்பு நிகழாது என்று புரிந்துகொண்டு, இந்த நிலையை மாற்ற தீவிரமாக ஆலோசித்தார். கடைசியில் வழியும் பிறந்தது.

ஏகோஹம் த்விதாஸ்யாம் - ஒன்றாக உள்ள நான் அன்யோன்ய பந்தமுள்ள இரண்டாக ஆவேன் என்று ஸங்கல்பித்தார். அப்போது ஆணும் பெண்ணுமாக இரண்டு ஸ்வரூபங்கள் உண்டாயின. பிரம்மதேவனின் விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய ஆற்றலுடன், ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிகள் தொடர்ந்து தானாகவே நடக்கக் கூடியவாறு படைக்கப்பட்டவர்களுமே இந்த இருவரும். அவர்கள் ஒருவரையொருவர் கண்டபோது, பெண் தான் ஒரு அபலையென்றும், தன்னை ரக்ஷிக்க மிகவும் அன்புடன் கூடிய ஒருவர் தேவையென்றும் உணர்ந்தாள். ஆணுக்கோ, தான் பூர்ணமானவன் அல்ல என்றும், தனக்கு உதவி செய்யவும், ஸுகத்தைக் கொடுக்கவும் ஒருவர் வேண்டுமென்றும் தோன்றியது.

இவ்விதம் ஒருவரையொருவர் ஈர்ப்புடனும், வியப்புடனும் பார்த்துக்கொண்டு நின்ற அவர்களை நோக்கி, அவர்களுக்கு என்ன வேண்டுமென பிரம்மதேவன் கேட்டார். தங்களை தம்பதிகளாக்க வேண்டுமென அவர்கள் கேட்டதும், மிகவும் திருப்தியடைந்ததுடன், தான் செய்ய வேண்டியதைச் செய்து முடித்துவிட்டதாக எண்ணி மகிழ்ச்சியடைந்தார். மனித சமுதாயத்தில் முதன்முதலாகத் தோன்றிய ஸ்வாயம்புவ மனுவும், சதரூபாதேவியுமான அவர்களை பிரம்மதேவன் முதன்முதலாக விவாஹம் செய்வித்து தம்பதிகளாக்கினார்.

ஒன்றாக இருக்கும் நான் இரண்டாக ஆக வேண்டுமென பிரம்மதேவன் செய்த ஸங்கல்பம் அவர் வேண்டியதுபோல் பலித்தது. தொடர்ந்து அந்த ஸங்கல்பமே எல்லா வர்க்கங்களுக்கும் பரவியது. எல்லா வர்க்கத்திலும் பெண், ஆண் என்ற வித்தியாசமான இரண்டு வியக்திகள் தோன்றினர். எல்லோரிடமும் தான் பூரணமானவன் அல்ல என்ற எண்ணம் உண்டாயிற்று. அதன் பின்னர், ஆண் பெண்ணிடமும், பெண் ஆணிடமும் அன்புகாட்டவும், ஆசைப்படவும் துவங்கினர். அது மட்டுமல்லாமல், ஆணும் பெண்ணும் கூடிய பின்னரும் நிறைவின்மையின் நிழல் அவர்களைத் தொடர்ந்தது. தங்களுக்கு யாருமில்லையே என்ற எண்ணம் மேலெழுந்து ஒரு புத்திரன் வேண்டுமென்னும் பிரார்த்தனையாக மாறுகிறது. ஆண் மகவு பிறந்த பின்னும் நிறைவு வருவதில்லை. பெண் குழந்தை வேண்டுமென்ற பிரார்த்தனை எழுகிறது. இதுவும் நிறைவேறினால் தன் மகனுக்கு ஒரு புத்திரன் பிறக்க வேண்டும் என்ற ஆசை வருகிறது. இவ்வாறு, எதனாலும் நிறைவு வராமல் ஒன்றன்பின் ஒன்றாக ஆசைகளின் பட்டியல் மட்டும் நீண்டுகொண்டே போகிறது.

இந்த நிலையில் இனி ப்ரபஞ்சத்தில் ப்ரஜைகள் உண்டாவதற்கென நான் எதுவும் செய்ய வேண்டியதில்லை என்பதை உணர்ந்து, பிரம்மதேவன் நிறைவடைந்தார்.

இவ்வாறிருக்க, ஒரு தினம் யதேச்சையாக பூமி ஒட்டுமொத்தமாகத் தண்ணீரில் மூழ்கத் தொடங்கியது. எதனால் என்று அறியாமல் எல்லோரும் கலங்க, ஜனங்களைக் காப்பாற்றும் பொறுப்பேற்றுள்ள ஸ்வாயம்புவ மனு மிகவும் பயந்து போனார். பிரம்மதேவனிடம் ஓடிச்சென்று தன் கவலையைத் தெரிவித்தார். பிரம்மதேவனும் எதனால் இவ்வாறு நடக்கிறதென்று புரிந்துகொள்ள முடியாமல் தவித்து, பகவான் நாராயணனைத் துதித்தார். அதைக் கேட்ட பகவான், பிரம்மதேவனின் நாஸிகா (மூக்கு) த்வாரத்தின் வழியாக மிகவும் சிறிய பன்றி வடிவத்தில் கீழே குதித்து, உடனே மிகவும் பெரிய உருவமாக வளரத் தொடங்கினார். மிகவும் பெரிய அந்த உருவமான வராஹ ரூபம் (பன்றி ரூபம்) பகவானேயெனப் புரிந்துகொண்ட தேவர்களும் ரிஷிகளும் அவரை வாழ்த்தித் துதித்து மலர்களைத் தூவினர். பகவான் மிகவும் மகிழ்ச்சியுடன் அனைவரையும் ஆசீர்வதித்து, தண்ணீருக்குள் மூழ்கிய பூமியைத் தேடலானார்.

பாதாளம் வரை சென்றுவிட்ட பூமியைத் தன் தெற்றிப் பல்லில் தாங்கிக்கொண்டு மேலே வரும்போது தன்னை எதிர்த்த ஹிரண்யாக்ஷனைக் கொன்று, பூமியை அதனிடத்தில் வைத்துவிட்டு பகவான் மறைந்தார்.

இதுவே சாதாரணமாக வராஹ அவதாரம் பற்றிக் கூறப்படும் கதை. இனி அதை ஆழமாகச் சிந்தித்துத் தத்துவங்களை உணர்வோம்.

அக்னி, நெய், ஹவிஸ், ஸமித்து ஆகிய யஜ்ஞங்களில் பயன்படுத்தப்படும் பொருட்களே உருமாறி வராஹமாக ஆயிற்று என்பர். யஜ்ஞமென்பது இறைவனுக்கு அர்ப்பணமாக தியாகத்தோடு செய்யப்படும் கர்மங்களாகும். ஆகவேதான் வராஹமூர்த்தியை யஜ்ஞஸ்வரூபமாகவே தேவர்கள் துதிக்கிறார்கள்.

பிரம்ம நிஷ்டையும், தர்மத்தில் ஈடுபாடுமே முன்பு கூறிய தாம்பத்ய தர்மம் என்பதை இங்கு நாம் நினைவுகூர வேண்டும். ஆனால் மனிதர்கள் காலப்போக்கில் அதை மறந்து, தங்களைச் செயல்களில் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டு, அதன் பயனாக காமமும், சுயநலமும் உள்ளவர்களாக மாறினர். அதனால் தீய சக்திகள் வளர்ந்து, உலகைச் சார்ந்த அனுபவங்களாகச் சித்தரிக்கப்பட்ட பூமி நீரில் மூழ்கியது. நீசமான கர்மங்களால் ஏற்படும் நாசத்தையே அது குறிப்பிடுகிறது. பின்பு வராஹ மூர்த்தி அதை மீட்டது, தியாக புத்தியுடன் செய்யும் தர்மமான செயல்களால் உலகம் அழிவிலிருந்து

காப்பாற்றப்பட்டதை குறிக்கின்றது. அழிவிற்கும் வளர்ச்சிக்கும் காரணம் நாம் செய்யும் செயல்களே.

வராஹரூபத்தை இரண்டு கோணங்களில் பார்க்கலாம். ஒன்று, ஸத்காரியங்களின் நிறைவான ஆராதிக்கத்தக்க பகவானாகவும், இரண்டாவது அமங்கள ஸ்வரூபமான (அருவறுக்கத்தக்க) பன்றியாகவும் பார்க்கலாம். இதே போன்று கர்மத்திற்கும் இருகோணங்கள் உண்டு. ஒன்று, யஜ்ஞமாகச் செய்யப்படும் கர்மத்திற்கு உலகை மேன்மைப்படுத்தும் சக்தியுள்ளது. இரண்டாவதான சுயநலமிக்க அசுரத்தனமான செயல்கள் பன்றியைப் போன்று அமங்கள ஸ்வரூபமும், அருவறுக்கத்தக்கதுமாகும்.

சுருக்கமாகக் கூறினால், இல்லறத்தான் (க்ருஹஸ்தன்) தியாகமும் தர்மமும் உடையவனாக இருந்தால், அவன் கடவுளுக்குச் சமமானவனாகிறான். போகியும், தன்னலமுள்ளவனாகவும் இருப்பவன் அஸுரனுக்கு இணையானவனாகவும், எல்லா நாசத்திற்கும் காரணமாகவும் ஆகிறான். இதுவே வராஹ அவதாரக் கதை சுட்டிக் காட்டும் அடிப்படைத் தத்துவம்.

இந்தக் கதை கர்மயோகத்தின் பெருமையை எடுத்துக் கூறி, இல்லறத்தார் தவறாமல் கர்மயோகத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், தவறினால் அவர்கள் அழிவையே நோக்கிச் செல்வர் என்பதையும் தெளிவாக்கியுள்ளது.

மனித சமுதாயம் பிரும்மச்சாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸன்யாசி என நான்கு ஆச்ரமங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் கிருஹஸ்தனைத் தவிர மற்ற மூன்று பிரிவினர்க்கும் உலகக் கடமைகளோ, பொருட்செல்வமோ கிடையாது. இருப்பினும் அவர்களும் வாழ வேண்டும். இல்லறத்தானுக்குத் தியாக மனப்பான்மை இல்லாவிடில் இவர்கள் வாழ்வது எவ்வாறு ஸாத்தியமாகும்? மேற்கூறிய மூன்று பிரிவினரும் ப்ரம்மநிஷ்டரும், பரம தியாகிகளுமாக இருப்பதால், அவர்கள் வாழ்க்கையில் ஏதாவது குறையேற்பட்டால் அது உலக அழிவிற்கே வழிவகுக்கும். அதற்காகவே க்ருஹஸ்தன் கர்மயோகியாக இருக்க வேண்டுமென்றும், இல்லாது போனால் அனைத்துமே நாசமடையும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வைகுண்டத்தில் காவலாளிகளாக இருந்த ஜயவிஜயன்மார், ஸனகாதிகளால் சபிக்கப்பட்டு, அஸுரர்களாகப் பிறந்த கதையைப் பார்க்கும்போது, வைகுண்டத்திற்குப் போனாலும் ஒருவர் கீழ்நிலைக்கு செல்ல வாய்ப்புள்ளதென்பது தெரிகிறது. ஒருவரது ஸம்ஸ்காரம் கீழ்த்தரமாகப் போனால், அவரது செயல்களும் தீயவையாக மாறி, அவை தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிடுகிறது. எத்தனை பெரிய மஹானாக இருந்தாலும் தீய கர்மங்களைச் செய்து, வழுக்கி விழும் வாய்ப்புள்ளது. ஆகவே எப்பொழுதும் மிகவும் எச்சரிக்கையுடன் தன்நிலையில் உறுதியாக வேண்டும். சபலமான (பலவீனமான) மனதில் எப்பொழுதும் கெட்ட எண்ணம் உதித்த வண்ணமிருக்கும். விவேகத்தால் அவற்றை நீக்க வேண்டும். இல்லாவிடில் பரிதாபமான நிலைக்குத் தள்ளப்படுவது உறுதி. இதுவே இங்கு தெளிவாக்கப்படும் தத்துவம்.

இனி ஸ்வாயம்புவ மனுவின் மகளான தேவஹூதியை கர்த்தம ப்ரஜாபதி மணந்துகொண்ட ஸ்வாரஸ்யமான கதையின் மூலம் பல தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. அதற்குமுன் ப்ரஜாபதி என்றால் யாரென்று தெரிந்துக் கொள்வோம்.

செயல்கள் நிறைந்தது இந்த உலகம். கர்மத்தின் மூலமே எல்லாம் நடப்பதும்,

நடக்காமலிருப்பதும். கர்மத்திற்கு முக்யமாகக் காலம், தேசம், கர்த்தா என மூன்று உபாதிகள் உண்டு. மேற்கூறிய மூன்றும் சேரும்போதுதான் நான்காவதாகிய கர்மம் உண்டாகிறது. அதனால் இவற்றிற்குப் பிரபஞ்ச சேர்க்கையில் மிகவும் முக்யமான இடமுள்ளது. இதில் தேசத்தின் அதிபதியையே (தன் கட்டுக்குள் வைத்திருப்பவரையே) ராஜா என்றும், சக்ரவர்த்தி என்றும் அழைக்கிறோம். இதைப்போல காலத்திற்கு உள்ள அதிபதியே மனு. இதே போல் கர்த்தாக்களாகிய ஜீவன்களுக்கும் அதிபதி உண்டு. அவர்களே ப்ரஜாபதிகள். இவர்கள் ஜீவன்களை ஆள்கிறார்கள்.

பிரம்ம தேவனின் மானஸ புத்திரரான கர்த்தம ப்ரஜாபதி தந்தையின் சொற்படி திருமணம் செய்துக்கொண்டு, புத்திரப் பேறும் பெற்றவர் என்றாலும் ஆரம்பத்திலிருந்தே ப்ரம்ம நிஷ்டையிலும், தவமியற்றுவதிலும் நீண்டகாலம் ஈடுபட்டு, நிறைவான தபஸ்வியாகவே காலம் கழித்தார். அவருக்கு பகவானின் தரிசனமும் கிட்டியது. இயல்பாகவே அவருக்கு இந்த வைராக்யம், பிரம்ம நிஷ்டையாலும், தவத்தாலும், ஈச்வர தரிசனத்தாலும் மேலும் உறுதிப்பட்டது. பகவானிடம் அவர், தான் தந்தையாகிய பிரம்மதேவரின் கட்டளையை மீற முடியாமல் திருமணம் செய்துகொள்ள இணங்கினாலும், ஒருமுறை ஸம்ஸ்காரத்தில் இறங்கிவிட்டால், அதிலிருந்து மீள்வது கடினமென்பதால், அந்த இக்கட்டான நிலையிலிருந்து தன்னை காத்துக்கொள்ள ஒரு வழி காட்டியருளுமாறு வேண்டிக்கொண்டார். பகவானும் பகவானும் ஸ்வாயம்புவ மனுவின் மகளான தேவஹூதியை கர்த்தமர் மணந்துகொண்டால், ஸம்ஸ்காரத்தின் எவ்விதமான இடையூறும் ஏற்படாது என்றும், மேலும் தானே அவர்களின் மகனாக அவதரிப்பதாகவும் கூறி அருளினார். அதனால் திருப்தியடைந்த கர்த்தம ப்ரஜாபதி விவாகத்திற்குத் தயாராகி, உரிய காலத்திற்காகக் காத்திருந்தார்.

அதே நேரத்தில் ஸ்வாயம்புவ மனுவும், பல இடங்களில் நல்ல வரனைத் தேடியும், தன் மகள் தேவஹூதிக்கு விவாகம் கூடி வராத திருமணத்தினால் மனசஞ்சலத்துடன் இருக்கும்போது பிரம்மதேவனிடம் தன் கவலையைத் தெரிவித்தார். பிரம்மதேவனும், கர்த்தம ப்ரஜாபதிக்கு தேவஹூதியைத் திருமணம் செய்விக்குமாறு கூறினார்.

லௌகீகர்கள் (உலகாயதங்களில் ஈடுபட்டு மூழ்கிய மனிதர்கள்) கல்யாணமாகாவிட்டால் கவலைப்படுவார்கள். கல்யாணம் முடிந்தாலோ அதுவே பெரிய துக்கமாகவும், சுதந்திரம் பறிபோனதாகவும் நொந்துகொள்வார்கள். குழந்தைகள் பிறக்கவில்லையென்றால் அதுவே பெரிய கவலை. இருந்தாலோ அதுவே பெரிய துன்பம். ஆண் குழந்தையாயிருந்தால் பெண் குழந்தை இல்லையே என்றும், பெண் குழந்தை பிறந்துவிட்டாலோ ஆண் குழந்தை இல்லவே எனவும் குறைபட்டுக் கொள்வார். ஆண் பெண் இருவரும் பிறந்துவிட்டாலோ அவர்களை வளர்ப்பதற்கு மீண்டும் கவலைப்படுவார்கள். ஆக எப்படியிருந்தாலும், ஸம்ஸாரியான ஒரு கிருஹஸ்தனுக்கு ஒரு காலத்திலும் நிம்மதியில்லை.

பிரம்மதேவனின் மானஸ புத்திரனும், உலகின் முதல் சக்ரவர்த்தியுமான ஸ்வாயம்புவ மனுவின் நிலையே இப்படியென்றால், அவருக்குப் பிறகு வந்தவர்களெல்லாம் எம்மாத்திரம்! ஸம்ஸாரத்தில் சிக்கியவர்களுக்கு, அவர்கள் யாரானாலும் எந்தக் காலத்திலும், அனுபவங்கள் ஒரு மாதிரியே இருக்கும். ஈச்வர அம்சத்தோடு பிறந்த ஸ்வாயம்புவ மனுவிடம், பக்தி, ஞானம் முதலியவை குறைவின்றி

இருந்தும், ஸம்ஸாரத்தின் தாக்கம் அவரைத் திக்குமுக்காட செய்தது அவருடைய பெண் குழந்தைகளுடையவும், ஆண் குழந்தைகளின் சரித்திரத்தையும் பார்க்கும்போது தெள்ளத்தெளிவாகிறது. ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெற உதவுவதே ஞானம். இருந்தும், அதனைப் பயன்படுத்தி ஸம்ஸாரத்திலிருந்து வெளியே வர முடியாமல் போனாமல் அது இருந்துதான் என்ன பயன்?

பிரம்மதேவனின் வார்த்தைகளை மதித்து, ஸ்வாயம்புவ மனு, தேவஹூதியை கர்த்தம பிரஜாபதிக்குத் திருமணம் செய்து வைக்க நிச்சயித்தார். பொதுவாக வதூ, வரன் இவர்களின் பந்துக்கள் கலந்து ஆலோசித்து விவாஹத்தை நிச்சயம் செய்த பின்னர் நல்ல ஒரு முகூர்த்தத்தில் மணமகன் மணப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று, கன்னிகையை மணந்துக் கொள்வதே மரபு. ஆனால் தபஸ்வியான கர்த்தமர் இம்மாதிரியான லௌகீகமான சடங்குகளுக்கு இணைய மாட்டார் என்பதை ஸ்வாயம்புவ மனு அறிந்திருந்தார். ஏனென்றால் கர்த்தமருக்கு ஒரு பெண்ணின் மீதோ க்ருஹஸ்த தர்மத்திலோ மோஹமில்லையென்றும், அவர் விவாஹத்திற்கு சம்மதித்ததே தந்தையின் நிர்பந்தத்தினால் மட்டுமே என்ற உண்மையை அறிந்திருந்த ஸ்வாயம்புவ மனு சக்ரவர்த்திக்குரிய எந்தவித ஆடம்பரமுமின்றி, தன் மகளையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு வந்து, தன் மகளை விவாஹம் செய்துக்கொள்ளுமாறு கர்த்தமரை வேண்டினார். அதற்கு கர்த்தமர் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் ஜீவன் முக்தியே அன்றி தாம்பத்யம் அல்லவென்றும், மகப்பேறு கிட்டியதும் தான் ஸன்யாசம் மேற்கொள்வதற்கு சம்மதித்தால் அவர் மகளை மணக்க முடியுமென்றும் கூறினார். இதைக் கேட்டுத் திகைத்துக் கலக்கமடைந்த பெற்றோரை விவேகத்துடன் கூடிய தேவ ஹூதி சமாதானம் செய்ததும், ஒரு தபஸ்வியின் ஆச்ரமத்தில், அநேக ரிஷிகளின் முன்னிலையில், எந்தவிதமான ஆடம்பரமுமின்றி, உலகத்தின் முதல் சக்ரவர்த்தியான ஸ்வாயம்புவ மனுவின் மகளான தேவஹூதி என்ற அரசகுமாரிக்கு, கர்த்தமர் என்ற தபஸ்வியுடன் திருமணம் நிறைவேறியது.

இதுவரை தாய்தந்தையரின் அன்பு வெள்ளத்தில் திளைத்தவளும், பொது ஜனங்களின் கண்மணியும், அநேக பணியாட்களுடைய சேவையால் தரையில் கால் படாமல் ராஜபோகத்துடன், அரண்மனையில் வளர்ந்த தேவஹூதி, பட்டுமெத்தையில் உறங்கியவள் கட்டாந்தரையில் படுத்தும், பட்டுடைகள் தரித்தவள் மரவுரி ஆடைக்கு மாறியும், தந்தையின் மாளிகைக்கும், தபஸ்வியான கணவரின் பர்ணசாலைக்கும் மலைக்கும் மடுவுக்கும் போன்ற வித்தியாசம் இருந்தும், ஏதோ சக்தி தந்த ஊக்கத்தால், எந்தவித பாதிப்பும் இன்றி வாழத் தொடங்கினாள். மனதை வென்றுவிட்ட தேவஹூதி இந்த முரண்பாடான வாழ்க்கை வேதனையோ, மனச்சோர்வை ஏற்படுத்தவில்லை.

புதிய மணமக்களான கர்த்தமரும், தேவஹூதியும் குரு, சிஷ்யை என்ற பாவத்தில் தவ வாழ்க்கை வாழ்ந்து பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்தன. தேவஹூதியின் அழகும் கம்பீரமும் காலப்போக்கில் மறைந்து, புலனடக்கத்தால் ஒரு பேரொளியாக மாறியது. இதைக் கண்டு மனமிளகிய கர்த்தமர், தன் விசேஷ சித்திகளால் அவரிருவரின் உடல்களையும் இளமைப்பொலிவுடன் மாற்றி, மற்றும் பலவிதமான திவ்யமான பொருட்களையும் ஸ்ருஷ்டித்து, பின் இருவரும் தாம்பத்யத்தில் மூழ்கி, க்ருஹஸ்த தர்மத்தின்படி வாழ்ந்து வந்தனர். காலப்போக்கில் அவர்களுக்கு ஒன்பது பெண்குழந்தைகளும், பத்தாவதாக உலகப் பிரஸித்தி பெற்ற ஸ்ரீகபிலவாஸுதேவரும் பிறந்தனர். கபிலர் பிறந்தவுடனேயே தாய்க்கு விஷ்ணுரூபத்தில் தரிசனமளித்தும், பல திவ்ய பாவங்களைக் காட்டியும் தான் ஓர் ஈச்வர அவதாரம் என்பதைப் பலமுறை

அவருக்கு வெளிப்படுத்தினார். தகுந்த காலத்தில், முறைப்படி பெண்களுக்குத் திருமணம் செய்வித்தபின், கர்த்தமர், தன் புத்ரனாக அவதரித்த பகவானின் அனுமதியுடன் ஸன்யாசம் ஏற்று ஆச்ரமத்தை விட்டுப் பரிவ்ராஜகனாகச் சென்றார்.

கபிலோபதேசம்

கணவரும், பெண்மக்களும் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற பிறகு, தனிமையில் புத்ரனுடன் ஆச்ரமத்தில், பெரும்பாலும் கபிலர் தன் மகனென்ற பாவத்திலும், சில நேரம் அவர் ஈச்வரனேயென்ற எண்ணத்தோடும் வாழ்ந்து வந்தாள். எவ்வளவு பார்த்தாலும் கேட்டறிந்தாலும் ஈச்வரனை மறந்துபோகும் உலகத்தவரின் இயல்புபடி, தேவஹூதியும் கபிலரின் ஈச்வரத்வத்தை மறந்து, தனது மகனென்ற பாசம் கண்ணை மறைக்க, அவளுடைய மமகாரம் (தன்னுடைய மகன்) கூடியதே தவிர குறையவில்லை. ஒருநிமிடம் கூட மகளைப் பார்க்காமலிருக்க முடியாத நிலை வந்ததும், பகவான் அவளின் அஞ்ஞான சுமையைப் போக்கத் தீர்மானித்தார். அப்போது ஒரு நாள் காணாமல் போன குழந்தையைத் தேடி பயத்தோடு பதறிப்போய் தேவஹூதி, கதறி கூவி அழைத்துக்கொண்டே காட்டுக்குள் சென்று தேடும்போது, ஓர் ஆலமரத்தினடியே ஞானப்பிரகாசத்தினால் பத்து திக்குகளையும் (ஆகாயம், பூமி உட்பட) ஒளி வெள்ளத்தில் மூழ்கச் செய்து, ஜகத்குருவான பகவான் தக்ஷிணாமூர்த்தியின் தோற்றத்தில், வீராஸனத்தில் இருந்தருளி தன் மகனைக் கண்டாள். தரிசன மாத்திரத்தில் மனம் உள்முகமாகி, புத்திர பாவமும், மனிதபாவமும் முற்றிலும் மறைந்து, ஸம்பூர்ணமான ஈச்வர பாவத்துடன் பொங்கி எழுந்த பக்தியில் நிலைத்ததால் கண்களினின்றும் தாரைதாரையாக நீர் பெருகியது. புளகாங்கிதத்துடன் சிரஸ்ஸின்மேல் இருகரங்களையும் கூப்பி பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்துப் பின்வருமாறு கூறினாள் :-

நான் எனக்கு நன்மை கிடைக்குமென்று, வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் இந்திரியங்களை பந்துக்களாகக் கருதி அவற்றை நன்கு திருப்தி செய்வதற்காகவே எல்லா முயற்சிகளும் செய்தேன். அப்படி செய்வதன் மூலம் எனக்கு சுகமும், நிம்மதியும் கிட்டுமென நம்பியிருந்தேன். ஆனால் நான் இதுவரை செய்த முயற்சிகளால் அவற்றில் ஒன்றையும், ஒருமுறைகூட திருப்தி செய்ய முடியவில்லை. சுகமும், நிம்மதியும் கிடைக்காதது மட்டுமல்ல அடிக்கடி துக்கமும், சோர்வும் பெருகிக் கொண்டிருக்கிறது. இன்றோ உடலில் சக்தி குறைந்து ஒன்றும் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்திரியங்களுக்னோ சபலம் அதிகமாக உள்ளது. அவைகளைத் திருப்தி செய்தது எந்தவிதத்திலும் உபயோகப்படவில்லை என்பதை நன்கு உணர்கிறேன். ஆனால் அவற்றை அடக்கி வைக்க முடியவுமில்லை. இனி நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு எவ்வாறு சமாதானம் கிடைக்கும்? நான் எப்படி வாழ்ந்தால் வாழ்க்கை பயனுள்ளதாகும் என்று கற்றுத்தர வேண்டும் என்றாள்.

தாயின் கேள்வியைச் செவிமடுத்த கபில வாஸுதேவர் திருப்தி அடைந்து பதிலுரைத்தார்.

வாழ்க்கை இரண்டு விதத்தில் உள்ளது. ஒன்று – ஆன்மிக வாழ்க்கை. மற்றது லோகாயதமானது. இதில் ஆன்மிக வாழ்க்கையினால் மட்டுமே சமாதானம் கிடைக்கும். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் சேர்க்கைதான் அந்தக்கரணம் (உள்மனம், ஆழ்மனம்). இந்த உலகமும் முக்குணங்களானதால், மனம் இந்த உலகிலிருந்து பிரிந்து நிற்பது கடினம். அது முக்குணங்களாலான உலகப் பொருட்களை மட்டுமே நினைத்துக்கொண்டும், செயல்பட்டுக்கொண்டும்,

ஆசைப்பட்டுக்கொண்டும் அனுபவித்துக் கொண்டுமிருக்கும்.

இவ்வுலகம் ஜடமென்பதிலும், தவிர்க்க முடியாத துக்கத்தின் ஸ்வரூபமென்பதிலும் ஐயமில்லை. அதனால் உலகப்பொருட்களை மாத்திரம் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் அந்தக்கரணத்திற்கு (ஆழ்மனத்திற்கு) அவைகளிடமிருந்து உயிரற்ற தன்மையும், துக்கமும் தவிர வேறு எதுவும் கிடைக்க வழியில்லை. இருந்தும், ஒன்றிலிருந்து ஏற்படும் துக்கத்தை நீக்க வேறொன்றை நாடுவதென்பது ஒரு வியக்கத்தக்க மாயமே! இதனால் புதியதொரு துக்கம் உருவாகிறது. இதுபோல சங்கிலித்தொடராக துக்கம் வந்து கொண்டேயிருக்கிறது. இந்த லௌகிக வாழ்க்கையென்பது துக்கங்களின் இடையே செல்லும் ஒரு பிரயாணமாகும். இதை எவ்வளவுதான் பார்த்தாலும், அனுபவித்தாலும் புரிந்துகொள்ள முடிவதில்லை. அதனால்தான் இது விந்தையான ஒரு மாயமெனப்படுகிறது.

அந்தக்கரணம், உலகம் இரண்டுமே முக்குணங்களின் ஸ்வரூபமானதால், ஒன்றைவிட்டு ஒன்று விலகி (பிரிந்து) நிற்பது மிகவும் கடினம். நிற்காதிருந்தாலோ ஒரு ஜீவனுடைய அனுபவம் துக்கமயமானதுதான். இந்த வேதனைக்கு முடிவு கட்ட ஒரே ஒரு வழிதான் உள்ளது. அது நிர்குணமான, பரம சைதன்ய ஸ்வரூபத்தில் ஈச்வரனிடத்தில் அந்தக்கரணத்தை இணைப்பதேயாகும். தனக்குப் படித்த ஒன்றை எப்போதும் நினைத்துக்கொண்டே இருப்பது மனதின் தன்மை. முக்குணங்களாலான இவ்வுலகப் பொருட்களைக் காட்டிலும் நிர்குணமான ஈச்வரனை நேசிக்கத் தொடங்கினால், மனம் அழியும் பொருட்களை விட்டு, அமிர்தமான (அழிவில்லாத, நிலையான) ஈச்வரனையே பெரும்பாலும் நினைத்துக் கொண்டிருக்கும். புலன்கள் மூலம் செய்யப்படும் அனைத்துக் கர்மங்களையும் (செயல்களையும்) கடவுளுக்கு அர்ப்பணித்துவிட்டால், ஈச்வரனிடம் அன்பு பெருகிக் கொண்டே வந்து, உலக விஷயங்களிலிருந்து மனம் விலகி நிற்கும். இதுவே பக்தி செய்யும் முறை. பக்தியால் மட்டுமே மனம் முக்குணங்களையும் விட்டுத் தூய்மை அடையும். எப்பொழுது இறைவனின் மகிமைகளைக் கேட்பது, அவன் புகழ் பாடுவது, ஜபம் செய்வது, பூஜை, த்யானம், நமஸ்காரம் முதலியன செய்வது, இறைவனின் அடியார்களுடன் சேர்வது, கடவுள் நம்பிக்கையற்றவர்களிடமிருந்து விலகி நிற்பது என்று இத்தகைய பயிற்சிகளால் இறைவனிடம் அன்பு உண்டாவதோடு, வளரவும் செய்யும். பக்தி வளர்ந்தால் தெய்விகத்தன்மை அதிகரிக்கும். உலகத்தில் யாருக்கும் சுகம் பெற வழியில்லாததால், உலகப் பற்றைத் துறந்தால் மட்டுமே உண்மையான சுகத்தின் இருப்பிடத்தை அறிய முடியும். நான் எனும் அஹங்காரத்துடன், இருபத்து நான்கு ப்ரபஞ்ச உபாதிகளில் உழலும் ஜீவன், இறைத் தொண்டினால் மட்டுமே உலகப்பற்றை விட முடியும்.

ஸாங்க்ய யோகம்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை ஐந்து மஹா பூதங்கள். அவைகளுடைய தன்மாத்திரைகள் - சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து விஷயங்கள். காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்து இந்திரியங்கள் அவ்விஷயங்களை க்ரஹிக்கின்றன. இவற்றை ப்ராணன், அபானன், உதானன், சமானன், வ்யானன் என்ற ஐந்து ப்ராண சக்திகள் இயக்குகின்றன. இந்த இருபது ஜட பொருட்களுக்கு உயிரூட்டி அவற்றை இயக்கிக் கொண்டிருப்பவை மனம், சித்தம், புத்தி, அஹங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணமாகிய உட்புலன்கள். இந்த இருபத்து நான்கு தத்வங்களும் ஒன்று சேர்ந்துள்ளதே வ்யக்தி அல்லது உபாதியாகும்.

அஹங்கார மமகாரங்கள், மேற்கூறிய இருபத்துநான்கு தத்துவங்களைத் தாம் என்று எண்ணிக்கொண்டு அபிமானிக்கின்றன. ஜீவனென்ற காரணத்தால், அவற்றின் தர்மங்களையெல்லாம் தனது தர்மங்களாகக் கருதி அனுபவிக்கவும், செயல்படவும் செய்கின்றன. அதனால் எப்பொழுதும் துக்கமாகவே உள்ளது.

முக்கியமான உபாதியான அந்தக்கரணத்தில், கலந்து இறுகிப்போய் கிடக்கும் ரஜஸ், தமஸ் இவற்றில் மூழ்கி, ஜீவன் முழுமையான அஞ்ஞானியாகி, ஆயிரக்கணக்கான ஜன்மங்கள் பலவிதமான யோனிகளில் காலம் கழிக்கின்றது.

எத்தனை ஆயிரம் ஜன்மங்கள் எடுத்தாலும் தன்னையோ, தனக்கு ஸாக்ஷியாக உள்ள ஈச்வரனையோ அறிந்துக் கொள்ளாமலேயே காலத்தைக் கழிக்கின்றது. பிறக்கும்போதும், வாழும்போதும், இறக்கும்போதும் அதன் பிறகும் அதற்குத் துக்கத்தைத் தவிர வேறில்லை.

ஜகத், ஜீவன், அவற்றின் அறிவு, செயல் முதலிய அனைத்துமே குணமயமாக இருப்பதால், அதனால் குணங்களுக்கு அப்பாற்பட்ட ஸத்தியத்தை ஒருவிதத்திலும் தெரிந்துக் கொள்ள முடிவதில்லை.

ஜீவனானது, கணத்தில் அழிந்துப் போகக் கூடியவையும், அஸத்தியமாகவும் (உண்மையில் இருப்பற்றதாகவும்) உள்ள நாமரூபங்கள் உண்மையென நம்பி, இன்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு காலம் கழிக்கும். துக்கங்களையே சுகமென்று எண்ணிக்கொள்ளும். துக்கங்களை நீக்குவதற்கு துக்கங்களையே ஏற்கவும் செய்யும்.

இவ்வாறு ஸம்ஸாரத்தினைக் கடக்க வழியறியாது கலங்கி, அதிலேயே உழன்று கொண்டிருக்கும் ஜீவனை இறையருளால் கரையேற்றுவது ப்ரக்ருதி, புருஷ தத்துவங்களைப் பற்றிய அறிவே ஆகும். இந்த அறிவினால் (ஞானத்தினால்) மட்டுமே நிம்மதி ஏற்படும்.

பரம புருஷனாகிய ஈச்வரனின் ஸங்கல்பமே (இச்சையே) ப்ரக்ருதி. ஈச்வரன், ப்ரக்ருதி இவர்களின் சேர்க்கையினால் மஹத் தத்துவமும், அதிலிருந்து அஹம் தத்துவமும் உண்டாயின. அஹம் தத்துவத்திலிருந்து ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் உண்டாயின.

குணங்களுடன் அஹம் தத்துவம் சேர்ந்து ஸத்வ ப்ரதான அஹம் தத்துவம், ரஜஸ் ப்ரதான அஹம் தத்துவம், தமஸ் ப்ரதான அஹம் தத்துவம் என்றாயிற்று.

ஸத்வ ப்ரதான அஹம் தத்துவத்திலிருந்து அந்தக்கரணமும், தேவர்களும் உண்டாகினர்.

ரஜஸ் ப்ரதானமான அஹங்கார தத்துவத்திலிருந்து இந்திரியங்களும், அசுரர்களும் உண்டாயினர்.

தமோமய அஹம் தத்துவத்திலிருந்து சப்தம் முதலிய பஞ்ச தன்மாத்திரைகளும், ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களும் உண்டாயின.

காலமென்னும் மஹாசக்தியால் அசைக்கப்பட்டு இவையனைத்தும் ஒன்று சேர்ந்தன. ஈச்வர சைதன்யம் அதில் ஒளிர்ந்தபோது, ஜடமாக இருந்த அந்த அண்டம் (முட்டை) விரிந்து இந்த உலகமாக ஆயிற்று. இதுவே உலகம் அல்லது விராட் ஸ்வரூபம்.

இவ்வாறு இருக்கும்பொழுது, முக்குணங்கள் இல்லாத எந்தப் பொருள்தான் உலகில் இருக்க முடியும்? அந்தகரணம், அதன் அறிவு, அதன் மூலம்

அறிந்துகொள்ளப்படும் உலகம் அனைத்தும் குணமயமே. அந்தக்கரணத்தில் குணபாவங்கள் இருக்கும்வரை விருப்பு வெறுப்பு முதலிய விகாரங்களும், கர்ம வாஸனைகளும் ஜீவனை விட்டு விலகாது. தொடர்ந்து யோக ஸாதனைகள் செய்து மேற்கூறிய விருப்பு முதலியவற்றை அகற்ற முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

ராஜயோகம்

தர்மத்தை முறைப்படி அனுசரித்து இவ்வுலகில் வாழும் மனிதரால் மட்டுமே எந்தவித ஆன்மிக ஸாதனையிலும், ப்ரயேகமாக யோக ஸாதனையில் வெற்றியடைய முடியும். அதர்ம வழியில் செல்லாமல், தர்ம நிஷ்டையுடன் கூடிய நல்லதொரு வாழ்க்கை லௌகிகனுக்கு முதலில் தேவை. இவ்வாறு தர்ம நிஷ்டையும், கர்மங்களில் ச்ரத்தையும், நற்செயல்களில் ஈடுபாடும் உள்ள ஒரு ஜிக்ஞாஸு (உண்மையை அறிந்துகொள்ள ஆர்வம் உள்ளவன்) உரிய சமயத்தில், அனுபவம் நிறைந்த ஓர் ஆசார்யர் மூலம் யோக ஸாதனையைத் தொடங்க வேண்டும். எட்டு அங்கங்கள் கொண்ட இதை அஷ்டாங்க யோகம் என்பர்.

தியானமே யோகத்தின் தர்மம். தியானம் செய்யும்பொழுது ஏற்படக்கூடிய தடைகளை நீக்குவதற்காக ஏற்பட்டதே முதல் ஆறு ஸாதனைகளும். அகத்தில் உள்ள தடைகளை நீக்க மூன்று ஸாதனைகளும், புறத்தில் உள்ள தடைகளை நீக்க மூன்று ஸாதனைகளையும் படிப்படியாகப் பயில வேண்டும்.

சப்தம் முதலான விஷயங்களும், கண் முதலான இந்திரியங்களும், உடலுமே வெளியிலுள்ள தடைகள். ஏனென்றால் இவை மூன்றுமே ஜீவனை எப்பொழுதும் வெளியுலகத்திற்கு இழுத்த வண்ணமேயிருக்கின்றன. யமம், நியமம், ஆஸனம் ஆகிய மூன்று ஸாதனைகளால் மேற்கூறிய மூன்று தடைகளையும் நீக்க வேண்டும். ப்ராணன், மனம், புத்தி இவை மூன்றும் அகத்தே உள்ள தடைகள். ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணா எனப்படும் பயிற்சிகளால் உள்ளிருக்கும் இந்தத் தடைகளையும் நீக்க வேண்டும். இவ்வாறு உள்ளும் புறமும் ஒன்றுபோல் எதுவும் பாதிக்காமலிருந்தால் அமைதியும் ஒருமுகப்பாடும் கூடிய தியானம் எளிதாக ஏற்படும். உள்ளதை உள்ளவாறு அறியும் தன்மையும், மிகுந்த தூய்மையும் அமைதியும் உள்ள அந்தக்கரணத்தில் பேரழகுடன் கூடியவரும், ஸர்வாபரணங்களையும் அணிந்தவருமான பகவானுடைய ஸ்வரூபத்தை ஒவ்வொரு அவயவயமாக மெதுவாக தியானித்து உள்ளத்தில் நிலைநிறுத்த வேண்டும்.

அவ்வாறு பேரொளி வீசும் ஈச்வர ஸ்வரூபம், பூரணமாக, தெளிவாக ப்ரகாசப்படுத்தத் தொடங்கினால், மனமானது மற்ற விஷயங்களை முழுவதுமாக விட்டு, சிறிது சிறிதாக அந்த ஸ்வரூபத்தில் லயிக்கத் துவங்கும்.

மெள்ள மெள்ள மனது லயிக்கத் துவங்கும்பொழுது மனதினால் கற்பனை செய்யப்பட்ட அந்த உருவம் மறையத் துவங்கும்.

எல்லா ஸங்கல்பங்களோடும் கூடிய மனம் லயிக்கும்போது ஸங்கல்பங்கள் மறைந்து போய்விடுமென்பதால் எப்பொழுதுமுள்ள ஆத்ம ஸ்வரூபம் அல்லது ஈச்வர ஸ்வரூபம் ப்ரகாசிக்கும். இதுவே ஸமாதி. இது யோகத்தினால் ஏற்படும் அனுபூதி.

இவ்வாறு யோகத்தினாலோ ஞானத்தினாலோ பக்தியினாலே சலனங்களை அடக்கி, ஸத்யமான வஸ்துவை அறிந்து அனுபவிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் மட்டுமே வாழ்க்கையில் நிம்மதி உண்டாகும்.

(கால ப்ரபாவம்) காலத்தின் சிறப்பு

மனிதன் நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்ற பொருட்களனைத்தையும் காலம் அடித்து நொறுக்குகிறது. உலகம் உண்டானது முதல் சரீரத்தை நிலைநிறுத்துவதற்கான கடும் முயற்சி துவங்கிவிட்டது. ஆனால் இதுவரை ஒரு தேஹத்தைக்கூட நிரந்தரமாகக் காப்பாற்றி வைக்க முடியவில்லை. எல்லாவற்றையும் காலம் சின்னாபின்னமாக்கிவிட்டது. சரீரத்தை நிலையாக வைத்திருக்க முடியாதென அறிந்ததும், தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் விசேஷ புத்தியுடைய மனிதன் இப்போதும் அதைக் காப்பாற்றுவதற்காக தன் ஆயுள் முழுவதையும் செலவழிக்கிறான்.

எவையெல்லாம் நடக்கக் கூடாதென்று மனிதன் நினைக்கிறானோ, அவற்றையெல்லாம் நடத்தி முடிக்கிறது காலம். ஜீவன்களை ஜீவன்களே பிறக்கச் செய்தும், உண்டும் உண்ண வைத்தும் அடிக்க வைத்தும், கொல்ல வைத்தும் விளையாடுகின்ற ஸ்வரூபனான பரம புருஷனின் பெருமையைக் கண்ணிருந்தும் காணாமல் அறியாமையில் (அஞ்ஞானத்தில்) மூழ்குகின்றனர். விசேஷமான புத்தியும் (பகுத்தறிவும்) விவேகமும், வீரியமும் தனக்குண்டென்று பெருமைப்படும் மனிதனைக் காணும்போது பரிதாபமாகவே உள்ளது.

கர்மத்தின் பலன்

இளமைப்பருவம் எய்தியதும் மனிதன் தன்னுள் அதுவரையில் உறங்கிக் கிடந்த ஆசையின் விதைகள் முளைத்து, தழைத்து, ஆயிரமாயிரம் எதிர்பார்ப்புகளாகும்போது, ஸம்ஸாரமெனும் மஹா சமுத்திரத்தில் குதித்து, நீந்தி, ஆனந்தமாக விளையாடுகிறான். விவாஹம் செய்வது, மகப்பேறு பெறுவது, வீடு கட்டுவது, சொத்துபத்துகளைச் சேர்ப்பது, விவசாயம் என்று ஓய்வு ஓய்ச்சல் ஒழிவின்றி, ஆயிரக்கணக்கான பணிகளில் மூழ்குகிறான். தான் ஏன் பிறந்தோம் என்ற சிந்தனை செய்ய ஒரு நிமிடம் கூட அவனுக்கு ஓய்விருப்பதில்லை. எப்பொழுதும் ஓட்டம்தான். ஸத்தியத்தைப் பற்றியோ, செய்ய வேண்டியதைக் குறித்தோ, தர்மத்தைப் பற்றியோ அப்பொழுது எந்த சிந்தையுமில்லை.

இவ்வாறு கணக்கில்லாத துன்பங்களை ஸம்பாதித்து ஸம்பாதித்து வயோதிகத்தை எட்டிவிடுவர். அதுவரை மிகவும் அன்புடனும், மரியாதையுடனும் தன்னுடைய பழகிய (தன்) மனைவி, மக்கள் மற்றும் உறவினர்களது அன்பும், மரியாதையும் குறைந்து கொண்டே விடும்.

ஒவ்வொரு நாளும் துன்பம் கூடிக்கொண்டே வரும்போது மற்றவர்களுடைய ஆதரவும் குறையும் ஒரு நிலைக்கு வந்துவிடுவர். விவசாயம் செய்பவர் எப்படி அழுகிப்போன நாற்றை நடாமல் எறிந்து விடுகின்றனரோ, அதுபோல தன்னை மற்றவர்கள் ஒதுக்கி வைப்பது விளங்கத் துவங்கும். அப்பொழுது தனது இளமைப்பருவத்தைப் பற்றியும், அறிவின்றிச் செய்த தீயச் செயல்களைப் பற்றியும் எண்ணி வருந்தி, தன்னையே வெறுத்துக் கொள்வர். விவேகமில்லாததால் அந்நிலையிலும் வைராக்யம் உண்டாவதில்லை. மூப்பின் உச்சத்தில் புலன்களின் சக்தி இழந்து, சரீரம் துர்பலமாகி (வலுவிழந்து) சரீரம் துர்பலமாகி (வலுவிழந்து) வியாதிகளால் ஆக்ரமிக்கப்பட்டு மரணப் படுக்கையில் கிடக்க நேரிடும். உடல், மனம், இவற்றின் வேதனை தாங்காது, நொந்து போய், பயந்து, இதயம் வெடிக்கும் தருணத்தில் மரணம் அணுகிவிடும்.

சரீரத்தையும் வாழ்க்கையையும் நிலைநிறுத்தத் தான் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிட்டதை உணர்வான். நிராசையாலும், அதிகரித்துக்கொண்டே வரும் வியாதியின் உபாதையாலும், இதுவரை தனக்கு மிகவும் நெருங்கியவர்களாக இருந்தவர்களும், பிடித்தமான பொருட்களும், எல்லாமே ஒரே சமயத்தில் நிரந்தரமாக (ஒரேயடியாக) தன் கண்ணிலிருந்து மறைவது குறித்த வேதனையாலும், மனம் புழுங்கி, நிமிஷங்களை எண்ணிக்கொண்டு மரணப்படுக்கையில் கிடக்கும் நேரத்தில், பயந்து நடுங்க வைக்கும் மரண வாயு அசைந்து மூச்சுத் திணறத் துவங்கும். அதைத் தொடர்ந்து மூச்சின் போக்கு மேல்நோக்கி மட்டுமே இருக்கும். சக்தி வாய்ந்த இந்த மூச்சின் காரணமாக கபம் மேலே வந்து ச்வாஸத்தை அடைக்கும். மேலும் கீழும் செல்ல முடியாத ச்வாஸ வாயு, கர கர வென்று தொண்டையில் சுற்ற ஆரம்பிக்கும். பயம், திகைப்பு, பச்சாதாபம், வேதனை, மன உளைச்சல் இவைகளால் வெந்து சாம்பலாகும் ஜீவன் விழிகள் பிதுங்க ஏதாவது ஒரு த்வாரம் வழியாக வெளியே சென்றுவிடும்.

பற்றுள்ளவர் மரணம் நேர்ந்துவிட்டதென எண்ணி, சரீரத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்ல மற்ற ஏற்பாடுகளை செய்யத் தொடங்குவார்கள். ஜீவன் சரீரத்திலிருந்து பிரிந்து விட்ட போதிலும் அதன் மேலுள்ள பற்றின் காரணமாக அதை மறக்கவோ, விட்டுப்போகவோ அதற்கு முடியாமல், அந்த இடத்திலேயே (அந்தரிக்ஷத்தில்) வேதனையால் அழுதுகொண்டிருக்கும்.

சரீரத்தை விட்டு வேகமாக அகலுவதற்குத் தேவையான நற்காரியங்கள் செய்யாது போனால், அவை நடக்கும் வரை பழைய தேஹத்தை நினைத்தும், வேதனைப்பட்டும், நிராசையுடன் அதைச் சுற்றியே அலைந்துகொண்டிருக்கும். இவ்வாறு அலையும் ஜீவனையே ப்ரேதம் என்று சொல்கின்றனர். ப்ரேத பாவம் உண்டாகாமலிருக்கத்தக்க நற்காரியங்கள் செய்வது நல்லது. இல்லையென்றால் பின்னால், மற்றவர்களின் செயல்களின் மூலம் நற்காரியங்கள் செய்யும் ஸங்கல்பங்கள் எழுந்து கால க்ரமத்தில் சந்திரலோகத்திற்குச் செல்லும்.

அங்கும் அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவித்த பிறகு பூமிக்கு மீண்டும் வந்து வாயு, தண்ணீர், உணவு இவைகளில் ஏதாவது ஒன்றின் மூலம் தனது தந்தையாவதற்குத் தகுதியுள்ள ஒரு ஜீவனின் ஹ்ருதயதினுட் செல்லும். தொடர்ந்து அவரது விந்துவின் மூலம் தாயாகும் தகுதியுள்ள பெண்ணின் கர்ப்பத்தில் வந்து சேரும். ஆண், பெண் அணுக்கள் கூடி குமிழியாகப் பின் கருவாக மாறும். படிப்படியாக மாம்ஸம், நாடிகள், நரம்புகள் தோன்றி, ஒன்று சேர்ந்து அவயவங்களாகி, ஏழாவது மாதத்தில் எல்லா உறுப்புகளும் முழுமை பெற்று, ஜீவன் சரீரத்தில் அசையத் தொடங்கும். அதோடு தன் முற்பிறவிகளையும், அனுபவித்த கஷ்டங்களையும் நினைவு கூர்ந்து, மனம் வருந்தி, எவ்வாறாயினும் கர்ப்பமெனும் சிறையிலிருந்து விடுதலை பெற பகவானைப் பிரார்த்திக்கும்போது, இம்முறை நான் நிச்சயமாக எந்தத் தீய செயல்களும் செய்ய மாட்டேன் என்றும், நல்ல கர்மங்களையே செய்து, பக்தி, ஞானம், வைராக்யம் இவற்றைப் பெற்று, மீண்டும் பிறவா நிலையை அடைய உன்னைச் சரணடைவேன் என்றும் கடவுளிடம் பலமுறை சத்தியம் செய்து, துதிக்கவும் செய்யும்.

எட்டாம் மாதம் ப்ரஸவ வாயு (ஸூதி மாருதம்) அசைய ஆரம்பித்து, தொடர்ந்து மூன்று உறைகளுக்குள் இருக்கும் சிசு, இனம் புரியாத ஒரு திவ்ய சக்தியால் உந்தப்பட்டு, கர்ப்ப பாத்திரத்தை உடைத்துக்கொண்டு, தலைகீழாக, யோனி த்வாரம் வழியாக வெளியே வந்துவிடுகிறது.

பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் இரண்டு எல்லைகளாகும். இவ்விரண்டு

சமயத்திலும் ஏற்படும் அனுபவங்கள் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இரு வேளைகளிலும் (பிறக்கும்போதும், இறக்கும்போதும்) சுய பச்சாதாபம், பயம், பெருமூச்சு, தாங்க இயலாத வேதனை இவையுள்ள பூமியில் குழந்தை விழுந்த உடன் மீண்டும் மூச்சுவிடத் தொடங்குகிறது. ஆனால் அதுவரை இருந்த ஞானம் முழுவதும் இல்லாததாகி, ஏதோ ஓர் அற்புதமாக உலகிற்குத்தான் வந்துள்ளதாக சிசு நினைக்கிறது. பார்ப்பதும், கேட்பதெல்லாம் புதிதாகவும், மிகவும் ஆச்சரியமாகவும் உள்ளதென்ற அனுபவம் ஏற்படுகிறது. இவ்வாறு முந்தைய பிறவிகளைப் போலவே பலவிதமான துன்பங்கள், ஆபத்துக்கள் இவற்றின் இடையே வளர்ந்து யௌவனத்தை (இளமைப் பருவம்) அடைகிறது.

அப்பொழுதும் முற்பிறவியில் செய்ததுபோல் பல தீயச் செயல்களாகச் செய்து வீழ்ச்சியடைகிறது (தாழ்ந்த நிலை).

இவ்வாறு ஆயிரமாயிரம் ஜன்மங்கள் எடுத்தாலும் விவேக, வைராக்யங்கள் உண்டாகாமல் ஸம்ஸாரத்தில் மூழ்கி கலங்குகிறது ஜீவன். மனிதனல்லாமல் பிற யோனிகளில் பிறந்து ஜீவிக்கும்போது வைராக்ய விவேகங்கள் வளர வழியில்லை. பகுத்தறிவும், வீர்யமும் உள்ள மனித சரீரத்தில் (பிறவியில்) மட்டுமே முயற்சி செய்தால், அது சாத்தியமாகும் (முடியும், கைகூடும்).

ஆனால் துரதிருஷ்டவசமாக, அந்தப் பிறவியில் செய்யும் முயற்சிகள் அனைத்தும் புலனின்பத்திற்காகவே செய்யப்படுகிறது. இதனால் பக்ஷி, மிருகங்களை விடக் கூடுதலாக, அதர்மங்களையும், தீமைகளையும் மனிதன் செய்கிறான். நற்பணிகள் மூலமே ஒருவருக்கு, ஸத்ஸங்கமும், விவேக வைராக்யங்களும் உண்டாகும்.

இவ்வாறு பலவிதமாக தேவஹூதிக்கு உபதேசித்த ஸ்ரீகபில வாஸுதேவர், அம்மா! பாக்யத்தால் உங்களுக்கு இவையனைத்தும் கிடைத்துள்ளன. தெரிந்துகொள்ள வேண்டியதையெல்லாம் அநேகமாக நான் எடுத்துக் கூறிவிட்டேன். இனி மேற்கூறியவற்றில் ஏதாவது ஒரு வழியைக் கடைப்பிடித்து ஸம்ஸாரத்தை விட்டு, ஈச்வரனை அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்யுங்கள். மிஞ்சியுள்ள தங்கள் ஜீவிதம் (வாழ்க்கை) முடிவதற்கு முன்னால் உங்களுக்கு கைவல்ய ப்ராப்தி உண்டாகட்டும் என ஆசீர்வதித்தார்.

உபதேசத்தைக் கேட்ட தேவஹூதி முற்றிலுமாகப் புத்திர பாவத்தை மறந்து, முழுமையான ஈச்வர பாவத்துடன் பக்தியினால் நெகிழ்ந்து, பணிந்து, கபிலரை வலம் சந்து மீண்டும் மீண்டும் வணங்கித் துதித்தாள். கபில வாஸுதேவரும் திருப்தியுடன் தன் தாயை ஆசீர்வதித்துச் சென்றார்.

பின்னர் தேவஹூதி தனிமையில் கர்த்தமரின் ஆச்ரமத்தில் கடினமான தவமியற்றி பகவானை ஆராதித்தாள். அதன் பலனாகக் கடைசியில் சரீரத்தை விட்டு பரமகதியடைந்தாள்.

இவ்வாறு பத்து மக்களைப் பெற்ற தேவஹூதியும் கூட கைவல்ய ப்ராப்தி பெற்றாள் என்று மூன்றாவது அத்யாயம் நிறைவடைகிறது. அப்படியென்றால் பாரத பூமியில் யார்தான் மோக்ஷத்திற்குத் தகுதியில்லாதவர்? தமக்குள்ள அருகதையை தீய நடத்தையில் தொலைப்பதைத்தான் ஒவ்வொருவரும் செய்கிறார்கள் என்ற உட்கருத்தும் இதில் ஒலிக்கிறது.

மூன்றாவது ஸ்கந்தத்தில் படைப்பை பற்றி விளக்கப்பட்டதென்று ஏற்கெனவே கூறினோம். ஏராளமான கதைகளும், சரித்திரங்களும் அதில் கூறப்பட்டபோதிலும்,

அவையனைத்தும் படைப்பின் மர்மத்தை விளக்குவதற்காகவே எழுதப்பட்டுள்ளன.

ப்ரம்மதேவன் தன் ஒரு ஸங்கல்பத்தை இரண்டாக்கிப் பரிணமிக்க வைத்தார் என்பது ஸ்த்ரீ, புருஷன் என்ற இரு வ்யக்தித்வம் (தனித்தன்மையுடைய படைப்பு). ஒன்று ஆதாரமாகவும், மற்றது அதைச் சார்ந்து இருப்பதால் இரண்டும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டும் இருக்கிறது. இவை தானாகப் பிரிவது என்பதோ, பிரிக்கக் கூடியது என்பதோ அறிய இயலாத ஒன்று. இதுவே ஸ்ருஷ்டியின் செயல். படைத்தல் என்றால், காத்தலும், அழித்தலும் உண்டு. ஆகையால் ஸம்ஸாரத்தின் மூல காரணமும் அதுவேயாகும். அதனால் ஸம்ஸாரத்தை விட்டு அகல வேண்டுமானால், நிச்சயமாக ப்ரம்மசர்யம் தேவையென்பது உறுதியாகத் தெரிகிறது.

ஸ்கந்தம் 4

ஸ்வாயம்புவ மனுவின் மற்றொரு மகளான பரஸ்துதி தேவியினுடைய சரித்திரத்துடன் நான்காவது ஸ்கந்தம் ஆரம்பிக்கின்றது. தக்ஷ பிரஜாபதிக்கு பரஸ்துதியை திருமணம் செய்து வைத்தபின் அவர்களுக்கு பதினாறு பெண் குழந்தைகள் பிறந்தன. அதில் பதிமூன்று பெண்களை தர்மராஜாவிற்கும், ஒரு பெண்ணை அக்னிக்கும், ஒரு பெண்ணை பித்ருக்களுக்கும், எல்லோருக்கும் இளையவளான சதிதேவியை ஸ்ரீபரமேச்வரனுக்கும் பிரம்மதேவனின் ஆணைப்படி விவாஹம் செய்து வைத்தனர்.

சதிதேவியைத் தவிர மற்ற அனைத்துப் பெண்களுக்கும் புத்திர பாக்கியம் உண்டாயிற்று. சதிதேவி மட்டும் கருவுறாதது மட்டுமின்றி, யோக சக்தியினால் தேஹ வியோகம் செய்யும்படியுமாயிற்று. இந்தக் கட்டத்தில் அதன் காரணம் மட்டுமின்றி, ஸ்வாரஸ்யமான உலகாயத இயல்புகளை வெளிப்படுத்தும் கதையையும் கூற வேண்டியிருக்கிறது.

மனிதனின் மனம் குண ஸ்வரூபமானது அல்லவா? ஆனால் ஈச்வரனோ முழுவதும் நிர்குணமான ஸ்வரூபியானவர். அதனால் மனதினால் ஈச்வரனை தியானிப்பது மிகவும் கடினம். வேதம், அந்த இன்னலை நீக்கி எளிதாக்கியுள்ளது. அதுதான் ஸகுண ஆராதனை. ஸகுண பக்தியானது, சைவம், வைஷ்ணவம், சாக்தம் என மூன்று விதத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

ஈச்வரன் ஒருவரேயாயினும், மனிதனின் இயல்பும், விருப்பு வெறுப்புகளும் பலவிதமானதால், அவனுடைய நன்மைக்கும், எளிய முறையில் வழிபடுவதற்கும் மட்டுமே, ஒன்றான ஈச்வரனை மூன்றுவிதமான வழிகளில் வழிபடும் முறை வழக்கத்தில் கொண்டு வரப்பட்டது. மூன்றுவிதமாக வழிபடுவதால், ஈச்வரன் பலர் என்றோ, சைவ வைஷ்ணவ ஸம்ப்ரதாயங்கள் ஒன்றுக்கொன்று முரணனாவை என்றோ பொருள் அல்ல.

ஆனால் பிற்காலத்தில் மனிதனின் அறியாமையால், சைவ, வைஷ்ணவ, சாக்த வழிபாட்டு முறைகள் வேறுபட்டு, சிவனும், விஷ்ணுவும், தேவியும் வேறு வேறு என்று மக்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர். ஒவ்வொருவரும் தத்தமது வழியே உயர்ந்தது என்றும், மற்றவை தாழ்ந்தவை என்றும் கணக்கிடத் தொடங்கினர். இவ்விதமாக, இந்த மூவரும் ஓரே ஈச்வரனை மட்டுமே வழிபட்டாலும், அந்த உண்மையை மறந்து, ஒவ்வொருவருடைய கடவுளும் வேறேயென்று கருதி, ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டத் தொடங்கினர். அது பின்பு மக்களுக்கு ஆபத்தாகவும் போயிற்று. துர்பாக்கியவசத்தினால், தக்ஷ பிரஜாபதியின் வாழ்க்கையிலும் அவ்விதமே ஆயிற்று. அவர் பிறவியில் வைஷ்ணவராக இருந்த காரணத்திநால், சிவனோடும் சைவர்களோடும் வெறுப்பும் பகையும் கொண்டிருந்தார்.

நாட்பட அந்தப் பகைமை வளர்ந்து, செய்யத்தகாத செயல்களை அவர் செய்யத் தொடங்கினார். பலரும், பலமுறை அறிவுறுத்தியும் ஒரு பயனுமில்லை. இப்படிப்பட்ட சூழலில்தான், பிரம்மதேவன், தக்ஷனின் இந்தத் தவறான போக்கை மாற்ற, தக்ஷனுடைய மகளான சதிதேவிக்கும், ஸ்ரீபரமேச்வரனுக்கும் திருமணம் செய்து வைத்தார். மருமகனாகிவிட்டதால், சிவன்மேல் தக்ஷன் கொண்டிருந்த விரோதம் மறைந்துவிடும் என்று அவர் நினைத்தார். ஆனால், குருவான பிரம்மதேவனின் ஆணையை மீற முடியாமல், தன் மகளை சிவனுக்கு விவாஹம் செய்து வைத்தாரே தவிர, தக்ஷனுடைய விரோத பாவம் எள்ளளவும் குறையவில்லை. விவாஹத்தினால்

மகளைத் துறந்ததுதான் நடந்தது.

விவாஹத்திற்குப் பின், பலகாலமாகியும் மகளையும் மருமகனையும் தனது இருப்பிடத்திற்கு அழைக்கவில்லை. எல்லா அறிவுகளும் கூடி, சாமர்த்தியசாலியாக இருந்தாலும், தக்ஷ பிரஜாபதியை மதப்பற்று எத்தனை பெரிய துன்பத்தில் ஆழ்த்திவிட்டதைக் காணலாம்.

இந்நிலையில் ஸ்ருஷ்டி செய்யப்பட்டவர்கள் அனைவரும் இணைந்து யாகம் ஒன்றை நடத்தினர். யாகத்தில் பங்குள்ள அனைவரும் அங்கு வந்து சேர்ந்தனர். தக்ஷனும், தன் புரோகித பெருமக்களுடன் கூடி அந்த யாகசாலைக்குச் சென்றபோது, அவரைக் கண்டு பிரம்மதேவனையும் பரமேச்வரனையும் தவிர மற்ற அனைவரும் எழுந்து மரியாதை செய்தனர். கர்வம் மிகுந்த தக்ஷன் யாரெல்லாம் தனக்கு எழுந்து மரியாதை செய்கிறார்கள் என்றும், யாரெல்லாம் செய்யவில்லை என்பதையும் கவனிக்கச் சுற்றுமுற்றும் நோக்கியபோது, அவன் முதலில் கண்டது, இருக்கையிலேயே அமர்ந்திருந்த பிரம்மதேவனையும், பரமேச்வரனையுமேயாகும். பரமேச்வரன் எழாததால் கோபமடைந்த தக்ஷன் அவரையும் அங்கு கூடியிருந்த பெரியோர்களையும் தூற்றியது மட்டுமின்றி, ஸ்ரீபரமேச்வரனை சபிக்கவும் செய்தான். ஞானமும் பக்தியும் இருந்தும், ஊழ்வினையினாலும், தொடர்ந்து தான் பாராட்டி வந்த பகைமை காரணமாகவும் தக்ஷ பிரஜாபதி இந்நிலை எய்தினார்.

சாதாரண மனிதர்களுக்குக்கூட இந்த வேற்றுமை பாவம் வரக்கூடாதென்று கூறுகிறது வேத சாஸ்த்ரம். அப்படியிருக்கும்போது, பகவானிடமே இந்த வேற்றுமை காரணமாக பகைமை பாராட்டினால் என்ன செய்வது? இந்தத் தவறான புரிதல் காரணமாக ஒருவருக்கு என்னவெல்லாம் விபரீத விளைவுகள் ஏற்படுகின்றன?

பரமேச்வரனிடமுள்ள விரோதத்தைப் பெரிதாக்கி, வெளிப்படுத்தி, யாக சாலையிலிருந்து வெளியேறிய தக்ஷன், சிறிது காலத்திற்குப்பின் தான் ஒரு யாகம் நடத்தியபோது, பரமேச்வரனைத் தவிர மற்ற அனைவரையும் அழைத்திருந்தான். தன் தந்தை தன்னைப் புறக்கணித்திருந்தாலும், தான் அவரைப் புறக்கணிக்காத காரணத்தால் சதிதேவிக்கும் அந்த யாகத்திற்குச் செல்ல வேண்டுமென்று தோன்றியது. அவள் அங்கு சென்றால் என்னவெல்லாம் நடக்குமென்பதை பரமேச்வரன் கூறியும், பெண் புத்தியின் தடுமாற்றத்தினால் சதிதேவி தனியாக யாகசாலைக்குச் சென்றாள். அங்கு அவர் கூறியபடியே அவமானப்படுத்தப்பட்ட சதிதேவி, தந்தைமுன் தன் சரீரத்தை விட்டாள். பின்பு பரமசிவனின் கோபத்தினால் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் மிகவும் கேடு ஏற்பட்டு, பின் நிவ்ருத்தியும் கிட்டியது.

இந்தக் கதையில் தக்ஷனுடைய அறிவை மூடி மறைத்த கர்மடத்வம், ஈச்வரனுடன் கொண்ட வேற்றுமை புத்தியினால் வந்த மத வேற்றுமை, அதனால் வந்த அளவு கடந்த வெறுப்பு இவையெல்லாம் மிகவும் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான குணங்களும் செயல்களும் கொண்ட ஒருவருக்கு என்னவெல்லாம் நடக்குமென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவைதான் இந்தக் கதையிலிருந்து அறிந்துகொள்ள வேண்டிய தத்துவங்கள்.

இத்துடன் ஸ்வாயம்புவ மனுவின் பெண் மக்களின் கதை முடிந்து, இனி அவருடைய ஆண் மக்களின் கதை ஆரம்பமாகிறது. பிரியவிரதன், உத்தானபாதன் என்று இரண்டு ஆண்மக்கள் அவருக்கு இருந்தனர். இதில் பிரியவிரதன் மூத்தவனாக இருந்தபோதிலும், முதலில் விவாகம் முடித்ததும், ராஜ்ய பாலனத்திற்குத் தயாராக இருந்ததும், இளையவனான உத்தானபாதனேயாகும். இதன் காரணத்தை ஐந்தாவது

ஸ்கந்தத்தில் வரும் பிரியவிரதனின் கதையில் காண்போம்.

உத்தானபாத மஹாராஜா ஸுநீதி, ஸுருசி என்னும் இரண்டு கன்னிகைகளை விவாஹம் செய்து கொண்டார். முதல் மனைவியான ஸுநீதிக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால் ஸுருசியை இரண்டாவதாக செய்துகொண்ட கல்யாணம் அவருடைய வாழ்க்கையை மிகவும் பாதித்தது, பல குழப்பங்களை உண்டாக்கியது. பெண் பித்து பிடித்த ஓர் இல்லறத்தான் அனுபவிக்க வேண்டியவை இங்கு விவரமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. சுயக் கட்டுப்பாடு இல்லாத ஒருவனுக்கு ஒரு மனைவி இருந்தாலே ஸம்ஸாரத்தில் துன்பம் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றால், இரண்டு மனைவிகள உள்ளவனின் கதையைச் சொல்லவும் வேண்டுமோ?

உத்தானபாதன் இரண்டு மனைவிகளுடனும் அரண்மனையில் வசித்து வரும்போது, முதல் மனைவி ஸுநீதிக்கு கர்ப்பம் உண்டான சிறிது காலத்திற்குப்பின் ஸுருசியும் கர்ப்பமுற்றாள். அத்துடன் ராஜாவின் சனிதசையும் ஆரம்பித்தது. அவர் மனைவியரிடம் பொறாமையின் வித்து முளைத்து, வளர்ந்து, செழிக்க ஆரம்பித்தது. இரண்டு பேருமே நாளடைவில் ஆண் மகவைப் பெற்றெடுத்ததும், பொறாமையின் தீவிரம் அதிகரித்தது. காரணம், மூத்த பத்தினியின் மகனே அரசனாக மூடிசூட்டிக் கொள்ள வேண்டுமென்ற நியதி. ஆனால் ஸுருசி தன்னுடைய புத்திரனே அரியணையில் ஏற வேண்டுமென்று எண்ணினாள். ஆகவே அந்தப்புரத்தில் அமைதியும் இன்பமும் இல்லாதுபோய், ராஜாவிற்கு ஸங்கடம் ஏற்பட்டது. இவ்வாறு பிரச்சனை வளர்ந்துகொண்டே செல்லும்போது, இருவரில் ராஜாவின் மனம் கவர்ந்த ஸுருசி, வேண்டியபடி ஸந்தர்ப்பங்களை உபயோகித்துக்கொண்டு அவரை மெல்லத் தன் வசப்படுத்தி, ஸுநீதியை தந்திரத்தினால் அவரிடமிருந்து விலக்கி, அரண்மனையை விட்டு வெளியே வசிக்கும்படி செய்தாள். ஸுநீதியின் மகனான துருவனும், ஸுருசியின் மகனான உத்தமனும் ஒருவருக்கொருவர் அன்பும் நட்பும் பாராட்டி ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு இருக்கையில் ஒருநாள் துருவனுடன் விளையாடிக் கொண்டிருந்த உத்தமன், தன் தந்தை அழைத்ததால் ஓடிச்சென்று அரசர் மடியில் ஏறி அமர்ந்துகொண்டதைக் கண்ட துருவனும் ஓடி வந்து அவர் மடியில் அமர முயன்றான்.

இதைக் கண்டு வெகுண்ட ஸுருசி அவனைத் தடுத்துக் கடிந்து கொண்டது மட்டுமல்லாமல், அரசணையில் அமர வேண்டுமென்றால், காட்டிற்குச் சென்று தவம் செய்து, கடவுளருளால் அவன் திரும்பவும் தன் மகனாகப் பிறந்தால் மட்டுமே நடக்குமென்றும் கூறினாள். இதைக் கேட்டு துருவன் கதறிக்கொண்டே சென்றதும், அரசன் வாய் மூடி மௌனியாக இருந்தான்.

தீய எண்ணமுடைய ஒரு பெண்ணின் பேராசையால் தாழ்ந்துவிட்ட ஒரு மனிதனின் வாழ்க்கை மிகவும் பரிதாபத்திற்குரியது. உத்தானபாத மகாராஜாவின் தர்மநிஷ்டை, காற்றில் அடிக்கப்பட்ட பஞ்சுபோல் பறந்து போயிற்று. அவர் தன்னை எதிர்ப்பாரேயில்லாமல், இந்த பாரத சாம்ராஜ்யம் முழுவதும் ஆண்டு வந்தாலும், ஸுருசியின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததால், அவரது ஆண்மையும் தர்ம நிஷ்டையும் அவளது மூச்சுக்காற்றில் பறந்துவிட்டது. பெண்ணாதிக்கத்திற்கு உட்பட்ட ஆண் பரிஹாஸத்திற்கு உரியவனாகி அவனுடைய வாழ்க்கையும் தோல்வி அடைகிறது. அதுதான் உத்தானபாத மகாராஜாவிற்கும் ஏற்பட்டது.

அழுதுகொண்டே சென்ற துருவன் தன் தாயிடம் எல்லாவற்றையும் கூறியதும்,

அவளும் மிகவும் வருந்தி, அவனைத் தேற்ற முயன்றாள். ஆனால் அந்த க்ஷத்திரியக் குழந்தையின் தாங்க முடியாதத துக்கம் அதனால் அடங்கவில்லை. ஸுநீதியை தன் பிடிவாதத்தினாலும் புத்திபூர்வமான வாதத்தினாலும் சம்மதிக்க வைத்து, ஐந்தே வயதான அந்தச் சிறுவன் பயங்கரமான காட்டிற்குத் தவம் செய்யச் சென்றான். விளையாட வேண்டிய பருவத்தில், பால் மணம் மாறாத பாலன் க்ஷத்திரியர்களுக்கேயுள்ள பிடிவாதத்தினால் காட்டிற்குத் தவம் செய்யச் செல்வதைக் கண்ட நாரத மகரிஷி அதிசயப்பட்டார். பால்ய, கௌமார, யௌவன, வயோதிக நிலைகள் சரீரத்திற்கு மட்டுமே. ஆனால் சரீரமோ, ஈச்வர ஸாக்ஷாத்காரத்திற்காகவே உள்ளது. மனம் மட்டும் ஒத்துழைத்தால் ஒருவர் உயர்வதற்கு எதுவுமே தடையில்லை. ஆனால் எந்த அநுகூலமான சூழ்நிலை வந்த பின்பும் மனம் அதற்கு எதிராக இருப்பதுதான் உலக இயல்பு. ஒரு சிலருக்கே, பூர்வ ஜன்ம புண்ணியத்தினால் மனமும் அநுகூலமாவதைக் பார்க்கிறோம். இதுதான் துருவனுடைய தற்போதைய நிலைமை. நாரத மகரிஷி, அந்தக் குழந்தையைப் பரிசோதிக்கத் தீர்மானித்து, அவனை வழிமறித்து, நாட்டிற்குத் திருப்பி அனுப்ப மிகவும் முயற்சித்தும் அதனால் பயனொன்றுமில்லை. ஏனென்றால் அவ்வளவு தூரம் அச்சிறுவனின் வைராக்யம் உறுதியாக இருந்தது. அதனால் நாரத மகரிஷி, துருவனை, காளிந்தி நதிக்கரையில் உள்ள மதுவனத்தில் பகவானை தியானம் செய்யச் சொல்லி, அதன் முறைகளை உபதேசித்தார். துருவனும் அவ்விதமே, முறையாகத் தியானம் செய்து ஆழ்ந்த ஸமாதியில் ஆழ்ந்தான்.

பல வருடங்கள் தியானம் செய்தாலும் ஒருவருக்கு ஸமாதி நிலை வருவது கடினம். ஏனென்றால் நாமரூபங்கள் மனதிலிருந்து விலகாததுதான் காரணம். அவை நீங்கினால், ஒன்று ஸுஷுப்தி (ஆழ்ந்த உறக்கம்) அல்லது ஸமாதி ஏற்படாமல் போகாது. அஜ்ஞானிகளுக்கு உறக்கமும், ஞானிகளுக்கு ஸமாதியும் இயல்பாகவே ஏற்படும்.

இந்த பாலகனுடைய மனம், நாமரூபங்கள் நீங்கி நிர்மலமாக இருந்ததால் ஸமாதி நிலையில் ஐந்து மாதங்கள் கழிந்தன. ஆறாவது மாதத்தில் உணர்வில்லாத நிலையில் நிர்விகல்பத்தில் மட்டுமே ஆழ்ந்தான். வியஷ்டி ஸமஷ்டி (அண்டம், பிண்டம்) இரண்டும் ஒன்றாகி, உடலில் உலகமே ஸ்தம்பித்துவிட்டது. பயந்துபோன தேவர்கள் ஸ்ரீமஹாவிஷ்ணுவிடம் இதைப் பற்றி முறையிட்டதும், பகவான் மதுவனத்தில் ஸமாதியிலிருந்த துருவனை எழுப்பி அநுக்ரஹிக்கப் புறப்பட்டார்.

மார்பில் ஆடி அசையும் வனமாலையுடனும், காற்றில் பறக்கும் பீதாம்பரத்துடனும், அதிவேகமாக கருடன் மேலேறி, பத்து திக்குகளை பிரகாசமாக்கி ஜொலிக்கும் பேரொளியுடன் துருவனுடைய புருவ மத்தியில் ஆவிர்பவித்தார்.

பகவத் ஸான்னித்யத்தினால் மெதுவாக ஸமாதியிலிருந்து எழுந்த துருவன், பகவானைத் துதித்து வணங்கினான். அவனுக்கு அநுக்ரஹித்து பகவான் மறைந்ததும், ராஜதானிக்குத் திரும்பிச் சென்றான் துருவன்.

இதன் நடுவில் மகனைப் பிரிந்து வாடிய உத்தானபாதனை, நாரத மகரிஷி நடந்த அனைத்தையும் கூறி, ஸமாதானப்படுத்தியிருந்தார். பகவான் ஆசிபெற்று திரும்பி வரும் துருவனை உத்தானபாதர் எதிர்கொண்டு அழைத்து, பின் அனைவரும் அரசவைக்குச் சென்றனர். ஈச்வரனின் கருணைக்கு ஒருவர் பாத்திரமானால், அவரை இவ்வுலகம் முழுவதும் கொண்டாடுமென்றும், அவர் போகுமிடமெல்லாம் அமங்கலங்கள் அகன்று ஸுக ஸம்பத்துக்களே நிறையுமென்ற தத்துவம் துருவனுடைய அனுபவத் தெளிவாகிறது. அது மட்டுமின்றி, எவ்வளவு கடினமான துன்பம் ஒருவருக்கு

வந்தாலும் ஈச்வர பஜனையே உயர்ந்த பரிகாரம் என்பதும் இதிலிருந்து தெரிகிறது. தந்தைக்குப் பின் பட்டமேற்ற துருவன் 30,000 ஸம்வத்ஸரம் நாட்டை ஆண்டு, பின்பு கைவல்ய பிராப்தியடைந்தான்.

அடுத்து பிருது சக்ரவர்த்தியின் சரித்திரம் வருகிறது. அதற்குமுன் அங்கராஜாவின் கதையும், அவருடைய புத்திரன் வேனனுடைய கதையும் வருகிறது. தீமையின் அவதாரமான வேனன் ரிஷிகள் சாபத்தினால் இறந்ததும், நாட்டைப் பாதுகாக்க எவருமில்லாததால் ரிஷிகளின் விருப்பப்படி, பகவானனே வேனனுடைய சரீரத்தில் பிருதுவாக அவதரித்தார். அர்ச்சிஸ் எனும் பெண்ணாக அவதரித்த லக்ஷ்மியை மணந்துகொண்டு, அவருக்குப் பட்டாபிஷேகம் ஆனது.

வேனனுடைய கொடூரமான ஆட்சியால் ராஜ்யத்தில் எல்லாம் அழிந்து, பஞ்சத்திலும் பயத்திலும் ஆழ்ந்த ஜனங்கள் பிருது சக்ரவர்த்தியிடம் வந்துமுறையிட்டனர். அவர்களுடைய துயரத்தைக் கேட்டு மனமிளகிய பிருது பூமியுடன் போர் செய்யக் கிளம்பினார்.

பசுவின் உருவில் அவர்முன் தோன்றிய பூமிதேவி, யார் யாருக்கு என்னென்ன தேவைகளோ, அவைகளைத் தன்னிடமிருந்து கறந்து எடுத்துக்கொள்ள அனுமதித்தாள். அவ்விதமாக தேவர்களும், அஸுரர்களும், பித்ருக்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், ஸித்தர்களும், மனிதர்களும், மிருகங்களும், பறவைகளும், மலைகளுளும், மரங்களுமாகிய எல்லா உயிரினங்களும் அவரவர்க்கு வேண்டிய, அமிர்தம், கள், கவ்யம், தேன் முதலான தமக்கு வேண்டிய அனைத்தையும் கறந்து எடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு அறிந்துகொள்ள வேண்டிய பல தத்துவங்கள் ரஸமான கதைகள் மூலம் சொல்லப்பட்டுள்ளன. வேம்பும் மாமரமும் ஒரே நிலத்தில் விளைதலைப் போன்று ஒன்றோடொன்று முரண்பட்ட பொருட்களையும் தாராளமாக வெளிப்படுத்தும் காமதேனுவைப் போன்றது பூமி என்ற தத்துவத்தை அவள் பசு ரூபத்தில் ஆவிர்பவித்தது தெரியப்படுத்துகிறது.

தவத்தையும் தர்ம சிந்தனையையும் கொண்ட மக்கள் வாழும் பூமியில், அவர்களுக்குத் தேவையான பொருட்கள் தானே விளைந்து கொண்டிருந்தது வழக்கமாக இருந்தது. ஆனால் வேனனுடைய கொடுங்கோலாட்சியில் தர்மமும் தவமும் குறைந்து, மக்கள் தீய நடத்தையுள்ளவர்களாகவும், சுயநலம் கொண்டவர்களாகவும் ஆயினர். மனிதர்களின் சுயநலம் பெருகப் பெருக, பூமியின் இயற்கையான செழிப்பும், விளைச்சலும் முடிவுக்கு வந்தன. இதுதான் கடுமையான பஞ்சத்திற்குக் காரணம். தானாகவே எல்லாம் பூமியில் விளைந்து கொண்டிருந்ததால் மக்களுக்கு விவசாயம் செய்வதென்பது வழக்கத்தில் இல்லாததாக இருந்தது. பிருது சக்ரவர்த்தி, மக்களை விவசாயம் செய்து, தானியங்களை விளைவிக்கும் பழக்கத்தை உண்டாக்கினார். இப்போது விவசாயம் செய்தால் மட்டுமே விளைச்சலுண்டாகுமென்று ஆயிற்று. மேலும், பரம தியாகிகளுக்குத்தான் முயற்சியின்றியே அனைத்துத் தேவைகளும் நிறைவேறியும் மிகவும் சுயநலமுள்ளவர்களுக்கு அதிகம் உழைக்க வேண்டியும் வந்தது. இதுதான் பூமியினுடன் பிருது செய்யப்போன போர் முயற்சியும், கன்றாக்கி பாலூட்டிய தாய்ப்பசுவினிடமிரந்து கறந்து எடுத்ததிலும் பின்னுள்ள தத்துவம்.

இவ்வாறு பிருது சக்ரவர்த்தி மிகவும் குறைந்த காலத்திலேயே மக்களின் துன்பத்தைப் போக்கி நாட்டை வளப்படுத்தினார். மேலும், அவர் மக்களைக் கூட்டிச் சேர்த்து கிராமங்களும் பட்டணங்களும் நிர்மாணித்து அங்கு வசிக்கச் செய்தார்.

அதுவரை ஆங்காங்கே காடுகளில் தனித்தனியே வசித்து வந்த மக்கள், இப்போது வீடுகட்டி, வசிக்க ஆரம்பித்தனர. இவ்வாறுதான் கிராமங்களும் நகரங்களும் உண்டாகின. இதுவரை இல்லாதிருந்த சீர்திருத்தங்களையும் நாகரிகங்களையும் மக்களிடம் நடைமுறைக்குக் கொண்டு வந்தார் என்பது பிருது சரித்திரத்திலிருந்து தெரிகிறது. இவ்விதம் பிருது மகாராஜா, மக்களுக்கு பொருள் வளத்தையும், அச்வமேத யாகங்கள் செய்ததன் மூலம் தெய்விக அருளையும் பெறுமாறு செய்தார். இவ்விதம் பலகாலம் ஆண்டு, முடிவில் தன் மக்களிடம் ஆளும் பொறுப்பை அளித்துவிட்டு, மகாபிரஸ்தானம் செய்யும்முன், தன் குடிமக்களுக்கு ஆத்ம ஞானத்தையும் உபதேசித்தார்.

இந்த உலகில் பிறந்து வாழும் ஒவ்வொரு ஜீவனும் தனக்கு வேண்டுமோ வேண்டாமோ, பலவித கர்மங்களையும் செய்கின்றனர். அவற்றை எதற்காகச் செய்கிறோம், யாருக்காகச் செய்கிறோமென்று யாருக்கும் தெரிவதில்லை. அதைப் பற்றி யாரும் சிந்திப்பதுமில்லை. மற்ற ஜீவராசிகள் இவற்றை அறியாமலிருப்பது அதிசயமில்லை. ஆனால் விசேஷமான புத்தியும், விவேகமும் படைத்த மனிதன் அதை அறிய முடியும். எப்படி ஒரு மேடையில் ஆடும் நாட்டியக்காரரின் ஒவ்வொரு அசைவும் பார்வையாளர்களை மகிழ்விப்பதற்காகவே இருக்கிறதோ, அதே போல இவ்வுலகமாகிய நாடக நாட்டிய மேடையிலிருந்து மனிதர் செய்யும் ஒவ்வொரு செயலும் ஈச்வரனை மகிழ்விப்பதற்காகவே இருக்க வேண்டும். ஏனென்றால் ஈச்வரன் எங்கும் நிறைந்திருப்பதால், அவர் மகிழ்ந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சி கிடைக்கும். இந்த நிலை சுயநலத்தினால் இல்லாமல், தியாகத்தினால் மட்டுமே அடைய முடியும்.

இதுதான் பிருது சக்ரவர்த்தியின் உபதேசத்தின் சுருக்கம். உபதேசம் மட்டும் போதாதென்று, ஸநத் மஹரிஷியையும் இதே தத்துவத்தை மற்றொரு கோணத்தில் உபதேசிக்க வைத்தார். பின் அவர் தம் மனைவியுடன் வாநப்ரஸ்தம் சென்று, காட்டில் தன் தேகத்தை விட்டு பரமகதி அடைந்தார். பின்பு அவரது வம்சத்தில் வந்த ப்ராசீன பர்கிஸ்ஸின் சரித்திரம் வருகிறது. பின்னர் அவரது புத்திரர்களான ப்ரசேதஸ்களின் சரித்திரத்துடன் இந்த நான்காம் ஸ்கந்தம் முடிவடைகிறது.

புரஞ்சனோபாக்கியானம்

வைதிக கர்மத்தை நிஷ்காமத்துடன், ஈச்வர அர்ப்பண புத்தியுடன் செய்வதே நல்லது. ஏனென்றால் சித்தசுத்தி மாத்திரமே அதன் பலன். அது மட்டுமல்லாமல் ஆத்ம திருப்தியோ, ஜன்ம சாபல்யமோ கர்மத்தினால் கிடைக்காது. ஸத்கர்மங்களின் கதையே இதுதானென்றால், தீய கர்மங்களைப் பற்றிக் கூறவே வேண்டாம். கர்மத்தினால் ஒரு ஜீவன் அஜ்ஞானத்திலும் பந்தத்திலும் மூழ்கி, ஸம்ஸார துக்கம் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஒருவருக்கு இந்த உண்மை விளங்கி, கர்ம பந்தத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால் அந்தக்கரண சுத்தி உண்டாக வேண்டும். மனதில் நிறைந்து பொங்கி வரும் ஆசை, வெறுப்புகளுக்குக் காரணமான ரஜோ, தமோ குணங்கள் குறைந்து, ஸத்வ குணம் பெருகுவதுதான் அந்தக்கரண சுத்தியின் அடையாளம். நிஷ்காமத்துடன் வைதிக கர்மங்களைச் செய்வதன் மூலம் அதை அடைய முடியும். இதுதான் கர்மத்துடன் இணைந்த வைதிக ஸித்தாந்தம். ஆனால் சில முறை இந்த உண்மையை மறந்து, சிலர் கர்மத்துடன் ஒன்றிப்போய் அதையே விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு கர்மடர்களாகின்றனர். துர்பாக்கியவசமாக அவ்விதமான ஒருவர்தான் இந்த ராஜா பர்கிஸ்.

தயாளுவும் ஞானிகளுமாகிய பெரியோர், இப்படிப்பட்ட கர்மடர்களை கர்மங்களிலிருந்து விடுவித்துக் காப்பது இயல்பு. அதன்படி ஸ்ரீநாரத மஹரிஷியும் அரசனை ஆபத்திலிருந்து காப்பாற்றப் பல முறை முயன்றும், பர்கிஸ் அதற்குச் சம்மதிக்கவில்லை. அது மட்டுமல்லாமல் கர்மத்தினால் மட்டுமே ஒருவர் காப்பாற்றப்படுவார் என்றும் நாரதருக்கு அவர் திரும்பி உபதேசித்தார். இவ்விதம் மேன்மேலும் கர்மங்களைச் செய்துகொண்டே காலம் கழிந்ததும், பர்கிஸுக்கு பத்து புத்திரர்கள் உண்டாயினர். கர்ம பந்தமுள்ள அறிவிலிகளுக்குப் பிடித்த லௌகிக ஸம்பத்துக்கள் ஒன்றும் குறைவில்லாமல் அவருக்கு இருந்தபோதிலும், மன அமைதி மட்டும் இல்லாமல் போயிற்று. கர்மங்கள் பெருகப் பெருக மனக்கிலேசமும் அதிகரித்தது. ஆனால் அவருக்கு அது புரியாமல் கிலேச நிவர்த்திக்காக மீண்டும் மீண்டும் கர்மங்களை அதிகரித்துக்கொண்டே வர, கவலைகளும் அதிகரித்துக்கொண்டே போயின. இவ்விதம் அவர் நிம்மதியிழந்து, நிராசையுடன் இருக்கும்போது அவருடைய புத்திரர்கள் யௌவனமடைந்து விவாகத்திற்குத் தயாரான நிலை வந்ததும், அவர்களிடம் தன்னைப்போல் அவர்களும் துக்கமயமான ஸம்ஸாரத்தில் இறங்க வேண்டாமென்றும், பக்தி ஞான வைராக்யங்களை வளர்த்து ஈச்வர ஸாக்ஷாத்காரத்தை அடைய, தவம் செய்யுமாறும் கூறி அனுப்பினார். அவர்களும் அவ்வாறே சென்று, தவம் புரிந்து, ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் தரிசனம் பெற்றனர். அவரிடமிருந்து பெற்ற மந்திர உபதேசத்தாலும், ஆசியாலும் பிரசேதஸ் என்னும் புகழ்பெற்ற அந்த க்ஷத்திரிய குமாரர்கள் பரம புருஷனாகிய நாராயணனைத் துதித்து ஆராதிக்க ஆரம்பித்தனர்.

இதைக்கண்டு அதிசயித்த நாரதர், கர்மடனான அரசன் மனம் மாறி, தவத்திலும் ஈச்வர ஸாக்ஷாத்காரத்திலும் நம்பிக்கை வந்து தன் புத்திரர்களை அதில் செலுத்தியது கண்டு, இதுதான் அவருக்கு ஞானோபதேசம் செய்ய நல்ல தருணமென்று கருதி அவரிடம் வந்து நின்றார். முன்பெப்பொழுதும் காட்டாத பக்தி சிரத்தையுடன் பர்ஹிஸ் ராஜாவும் அவரை வரவேற்று உபசரித்தார். பின்பு, தனக்குக் கர்மத்தினால் யாதொரு இன்பமும் கிடைக்கவில்லையென்றும், அதனால் தனக்கு பாரமார்த்திகத்தை நாரதர் உபதேசிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதன்படி நாரதர் அவருக்கு புரஞ்சனன் பற்றிய கதையைக் கூறினார்.

ஜீவனின் ஸம்ஸாரத்தின் நிலையைச் சித்தரிக்கும் கதைதான் இது. ஆனால் அது பரோக்ஷமானதும் ஆகும். முன்பு புரஞ்சனன் என்ற புகழ்பெற்ற அரசன் இருந்தான். அவனுடன், அவனுக்குப் பிடித்தமானவற்றையெல்லாம் செய்து தரும் உறவினனும், அவனுக்கு மிகவும் நெருங்கியவனுமாகிய ஒருவனும் இருந்தான். ஆனால் புரஞ்சனன் அவனை ஒருமுறை கூட சந்தித்ததேயில்லை. ஒரு முறை புரஞ்சனன் வசிக்க ஒரு நல்ல இடத்தைத் தேடி அலைந்தபோது, இமாலயத்தின் தெற்குப் பகுதியில் மலையடிவாரத்தில் ஓர் இடம் அவனுக்குப் பிடித்திருந்தது. அங்கிருந்த ஒரு பெரிய கோட்டையிலிருந்து ஓர் அழகிய கன்னிகை வருவதைக் கண்டான். அவளை மணக்கவும் செய்து, அந்தக் கோட்டையில் ஸுகமாக வசித்து வந்தான். அந்தக் கோட்டைக்கு வெளியே செல்ல ஒன்பது வழிகளும் கோபுரங்களும் இருக்க, அவற்றில் எப்போதும் சுற்றி அலைந்துகொண்டு, விரோதிகள் வராமல் காப்பாற்றிக் கொண்டிருந்த ஓர் ஐந்துதலை நாகமும் இருந்தது. மேலும் ஏராளமான பணியாட்களும் அங்கு இருந்தனர். அங்கு சிறிது காலம் புரஞ்சனன் ஸுகமாக வசித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் அவன் வேட்டையாடத் தன் காவலர்களுடன் பஞ்சப் பிரஸ்தம் என்னும்

பெரிய காட்டிற்குச் சென்றான். எல்லா வகை மிருகங்களையும் வேட்டையாடி, பின் திரும்பி கோட்டைக்கு வந்தபோது, தன் மனைவி புரஞ்சனி மயக்கத்திலிருப்பதைக் கண்டு அவளுக்குத் தேவையான உபசாரங்களைச் சிறிது நேரம் செய்தான். பின்பு அவர்கள் வெகுகாலம் இன்பமாக வசித்தனர்.

அப்பொழுது புரஞ்சனன் ஒருமுறை எதிரிகளின் படையெடுப்பிற்கு ஆளாக நேர்ந்தது. சண்டவேகன் என்ற பிரபலமான கந்தர்வன் தன்னுடன் முந்நூற்றுப்பத்து கந்தர்வர்களையும், அதே அளவு கந்தர்வப் பெண்களையும், படையாகத் திரட்டிக்கொண்டு வந்து, புரஞ்சனின் கோட்டையை ஆக்ரமிக்கத் தொடங்கினான். தன் படைகளுடனும், புத்திரர்களுடனும் புரஞ்சனனும் அவர்களை எதிர்க்க, வெற்றி தோல்வியின்றி ஒரு பெரிய யுத்தம் தொடர்ந்து நடந்தது. அந்த சமயத்தில் ஒரு யவன ராஜா தன்னுடைய படைகளுடன், கந்தர்வனின் கூட சேர்ந்து புரஞ்சனனுடன் போராடத் தொடங்கினான். போறாத குறைக்கு, யாருக்கும் வேண்டாத காலபுத்ரி எனும் ஒரு கன்னிகையும் அவர்களுடன் சேர்ந்து புரஞ்சனனுக்கு தொல்லைக் கொடுக்கத் தொடங்கினாள்.

புரஞ்சனனும், தன்னால் முடிந்தவரை அவர்களிருவரையும் எதிர்த்துப் போர் புரிந்து பார்த்தும் பலனில்லாமல், தான் தன் பகைவர்களால் சிறைபிடிக்கப்படப் போகிறோம் என்று தெரிந்து, எப்படியாவது தப்பிக்க வேண்டுமென்ற ஆசையில், பிராண பயத்துடன் அக்கோட்டையின் ஏதோவொரு வாயில் வழியாகத் தப்பி ஓடினான். அப்படி வெகுகாலம் ஓடியபின் விதர்ப ராஜ்யத்தைச் சென்றடைந்து, அங்கேயே வசிக்கவும் செய்தான். நாளடைவில் அத்தேசத்து மன்னனின் மகளை மணந்து, மீண்டும் புதியதாக ஒரு தாம்பத்யத்தை ஆரம்பித்தான். புத்திரர்களும் குடும்பமுமாக வசித்து வருகையில், அங்கும் பகைவர்களுடன் போர் புரியும்படி ஆகி, போர்க்களத்தில் பகைவர்களால் கொல்லப்பட்டான். விவரமறிந்து துயரமடைந்த ராணி, அரசனின் சடலத்தை மயானத்திற்கு எடுத்துச் சென்று சிதையில் வைத்துக் கதறி அழுதாள். அப்போது ஒரு வயோதிக அந்தணர், அரசியின் கதறலைக் கேட்டு அவளிடம் வந்து, அவள் கதை முழுவதையும் கவனமாகக் கேட்டார்.

பின்பு அவர் அரசியிடம், அவள் ராஜகுமாரியுமல்ல, அந்தச் சடலம் அவளுடைய கணவனுமல்ல என்று கூறினார். மேலும் அந்த அரசன் இறக்கவுமில்லை என்றும் கூறினார். தானும் அரசனும் மானஸரஸ்ஸில் ஒரு தெய்விக நீர்நிலையில் ஸந்தோஷமாக இருந்து வந்த இரண்டு அன்னப் பறவைகளென்றும், துரதிருஷ்டவசமாகப் புரஞ்சனன் அவரைவிட்டுக் கீழுலகத்திற்கு வந்து, தன்னை முற்றிலும் மறந்தும் விட்டான் என்றும் அந்த முதியவர் கூறினார். உண்மையில் எதுவுமே நடக்கவில்லையென்றும், நடந்தவையெல்லாம் தன்னால் தோற்றுவிக்கப்படட மாயையே என்றும் கூறினார்.

இவ்வாறு அவர் பேசிக்கொண்டேயிருக்கும்போது, அரசி மறைந்து, இறந்து கிடந்த அரசனும், வயோதிக அந்தணரும் ஒன்றாகிவிட்டனர். இந்தக் கதையைக் கூறிய நாரதர், இதன் உள்ளடங்கிய தத்துவத்தையும், ப்ராசீன பர்கிஸின் வேண்டுகோளுக்கிணங்க கூறினார்.

புரஞ்சனனென்றால் சரீரம் என்று பொருள். சரீரம் கர்ம பலன்களினால் பல காலங்களிலும், பல யோனிகளிலும் திரும்பத் திரும்பப் பிறக்கிறது என்பதால் புரஞ்சனன் என்று பெயர். அதற்கு ஜீவனென்றும் பொருள் உண்டு.

ஜீவனின் பலவிதமான ஆசைகள், கர்மங்கள் காரணமாக விசித்திரமான

பலவிதமான சரீரங்கள் பல கால தேசங்களில் உண்டாகிறது. ஜீவனுடைய மிகவும் நெருங்கிய உறவினன் ஈச்வரன். ஆனால் ஒரு காலமும் அந்த உறவினரைக் காணவோ, அவர் பெயரைக் கூட அறிந்துகொள்ளவோ ஜீவன் முயன்றதில்லை. ஆனால் துன்பம் வரும்பொழுது மட்டும் ஜீவன் அவரை அணுகுவதுண்டு. அவ்விதம், பல கால தேசங்களிலும், பல கர்ப்பங்களில் பிறந்தும் இறந்தும் ஜீவன், புண்ணிய வசத்தால் தான் இவ்வாறு ஸம்ஸாரச் சுழலில் ஆழ்ந்து துன்பப்படுவதை எண்ணி வருந்துவதுண்டு. அதிலிருந்து தப்பிக்க வழி தேடினாலும், சுய முயற்சியினால் எந்த வழியும் தென்படுவதில்லை. எந்த ரூபத்தில் பிறந்தால், தனக்கு பக்தி, வைராக்ய, ஞானம் உண்டாகி ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை கிடைக்குமென்று ஜீவன் தேடும்பொழுது, அந்தத் தவிப்பின் பயனாக, பாரத பூமியில் மனித சரீரம் கிடைக்கிறது. இதைத்தான் இமாலயத்தின் தெற்கேயென்றும், மனித சரீரத்தையே கோட்டையென்றும் கூறப்பட்டது.

உடலில் உள்ள ஒன்பது துவாரங்களே ஒன்பது கோபுர வாயில்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கோபுர வாயிலும் ஒவ்வொரு ராஜ்ஜியத்திற்கு மட்டுமே செல்லும் வழியென்று குறிப்பிட்டது, ஒவ்வொரு இந்திரியமும் ஒவ்வொரு விஷயத்தில் மட்டுமே செல்வதைத்தான். எல்லாத் துவாரங்களிலும் எப்பொழுதும் சஞ்சரிக்கும் ஐந்து தலை நாகம், பஞ்ச வ்ருத்தி ஸ்வரூபமாகிய பிராணனாகும்.

புத்தியே புரஞ்சனியென்னும் ராஜகன்னிகை. புரஞ்சனனின் ஜாக்ரத் நிலைதான் ஆகாராதி லோக தர்மங்களை மட்டும் செய்துகொண்டும், துர்வாஸனைகளை வளர்த்திக் கொண்டுமிருந்த காலமென்று முதலில் கூறப்பட்டது. பின்பு, ஸ்வப்ன, ஸுஷுப்தி நிலைகளையே வேட்டையாடச் சென்றதாக விவரிக்கப்பட்டுள்ளது. வேட்டை முடிந்து வந்த பின் அரசி மூர்ச்சையிலிருந்ததாகக் கூறியிருந்தது, ஸ்வப்ன ஸுஷுப்திகளுக்குப் பிறகு ஜாக்ரத் நிலைக்கு மீண்டும் திரும்பி வந்த புத்தியின் சோம்பலையும் சோர்வையும் குறித்தது.

இவ்வாறு ஜாக்ரத் நிலைகளை மாறி மாறி கடந்தும், துர்வாஸனைகளையும் துஷ்கர்மங்களையும் மட்டுமே வளர்த்தும், துக்கங்களை அனுபவித்தும் வாழ்க்கை கழிகின்றது. காலப்போக்கில் பால யௌவன கௌமார நிலைகளைக் கடந்து வயோதிகத்திற்கு வந்ததையே, சண்டவேகன் என்ற கந்தர்வனின் படையெடுப்பு குறிக்கின்றது. சண்டவேகன் என்றால் யாரும் வெல்ல முடியாத வேகம் கொண்டவன் என்று பொருள், அதாவது காலம். அனாதியும் அனந்தமுமான காலத்தை வருடம் என்னும் அளவுகோலால் நாம் அளக்கிறோம். வருடமாகிய கால ரூபத்தின் பகுதிகளான நாட்களே கந்தர்வர்களும், கந்தர்வப் பெண்களாலான படைகளும்.

ஆண்கள் பகலாகவும், பெண்கள் இரவுகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். சண்டவேகன் படைகளுடன் ஆக்ரமதித்தது என்பது, பல வருடங்கள் கழிந்ததையே குறிக்கிறது. வயோதிகத்தில் சரீரத்தில் ஏற்படும் பல இன்னல்களை எதிர்த்து தேகத்தைக் காப்பாற்ற முயற்சிப்பதையே, புரஞ்சனன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள செய்த முயற்சிகள் குறிக்கின்றன.

பகைவர்களை எதிர்கொள்ள முடியாமல் கோட்டையிலிருந்து தப்பி வெளியேறியதையே மரணம் என்கிறோம். பின்பு விதர்ப ராஜ்ஜியத்தைச் சென்று அடைந்துதது, அவனுடைய அடுத்த பிறவியென்று பொருள். இவ்விதம் எவ்வளவோ ஆயிரமாயிரம் ஜன்மங்கள், பல கால தேசங்களிலும், பல யோனிகளிலும் சென்று பிறந்து, பிறகு ஈச்வரன் க்ருபையாலும், தன் பூர்வ ஜன்ம புண்ணியத்தினாலும், பக்தி,

ஞான, வைராக்யமுண்டாகி, ஸம்ஸாரத்திலிருந்து விடுபட ஒரு வாய்ப்பு கிட்டும்போது மஹாத்மாவாகிய ஒரு குருவைக் காணும்படி நேரும்.

அல்லது, கருணாமூர்த்தியான இறைவனே குரு வடிவத்தில் காப்பாற்ற வருகிறார். அவ்விதம் வந்த குருதான் அந்த வயோதிக அந்தணன். அவரிடம் உபதேசம் கேட்டு, தானும் ஈச்வரனும் வெவ்வேறானவரல்ல, ஒருவர்தான் என்ற புரிதல் வந்து, ஜனன மரணமெனும் மாயச்சுழல் மறைந்து, தான் பிறக்கவேயில்லாததனால், தனக்கு மரணமுமில்லை என்பதையும் அறிந்து ஜீவன்முக்தனானான். இதுதான் ஸம்ஸாரத்தில் அகப்பட்டுக்கொண்ட ஒரு ஜீவனின் கதையென்பது இங்கு கூறப்பட்ட தத்துவம்.

பின்பு நாரத மஹரிஷி இதே கருத்தை மிகவும் எளிய தன் பாணியில் மேலும் விவரித்தார்.

ஒரு பயங்கரமான காட்டில், தனக்கு முன் பதுங்கியிருக்கும் ஓநாய் கூட்டத்தையும், தன் பின்னே தொடர்ந்து வரும் வேடனையும் காணாது, பகைவர்களுக்கு நடுவில் தன்னுடைய ஆபத்தான நிலையைப் பற்றி சிந்திக்காமல், ருசியுள்ள உணவைத் தேடி உண்ணும் மானைப் போன்று ஸம்ஸாரத்தில் உள்ள மனிதன், பிரபஞ்சமென்னும் இப்பெருங்காட்டில் விஷயபோகங்களைத் தேடி அலைகிறான்.

தன்னை உய்யவொட்டாது தடுக்கும் தாயாதிகளும் மனைவி மக்களுமே ஓநாய் கூட்டமென்பது. பின்னால் தொடரும் வேடன்தான் காலம். இவற்றைக் காணாத மனிதன் விஷய போகங்களைத் தேடி ஆயுளைக் கழிக்கிறான். தன் பரிதாப நிலையைத் தெரிந்துகொண்டால் அதிலிருந்து தப்பிக்கத்தானே ஒருவன் முதலில் முயற்சி செய்ய வேண்டும்? அவ்வாறு எவரும் செய்யாததால், எவருக்குமே அந்த ஞானம் இல்லையென்றும், தான் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாகவும் ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் வலிய பகைவர் இருவர் நடுவில் நிற்கும் ஒருவன் தன் ஆபத்தை நினைத்து அதிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யவில்லையென்றால், அவன் அழிவதில் வியப்பென்ன இருக்கிறது? இதுதான் உலகில் நடந்துகொண்டிருக்கிறது. இனி தங்கள் விருப்பம்போல் செய்யலாம் என்று கூறி நாரத மஹரிஷி சென்றார்.

திகைத்துப்போன அரசன் தான் இதுவரையில் நம்பிச் செய்துவந்த கர்மங்கள் அனைத்தும் அபத்தம் என்று அறிந்துகொண்டு, அனாவசியமாக ஆயுளை வீணாக்கியதை நினைத்து வருந்தினார். பின்பு அனைத்தையும் துறந்து காட்டிற்குச் சென்றார். பின்பு நாட்டை ஆள யாருமில்லாத நிலை வந்து, ராஜ்யத்தில் அராஜகம் தலை தூக்கிற்று.

அவருடைய புத்திரர்களான பிரசேதஸுக்கள், நீரில் மூழ்கி ஆழ்ந்த தவத்திலிருந்து, பதினாயிரம் ஸம்வத்ஸரங்கள் சென்றன. முடிவில் பகவத் ஸாக்ஷாத்காரம் அடைந்தனர். அவர்களுக்கு ஸம்ஸாரத்தில் ஈடுபட விருப்பமில்லையென்றாலும் பகவானின் ஆணைப்படி கண்வ மஹரிஷியின் மகளான மாரிஷா என்ற கன்னிகையை மணந்துகொண்டு, கர்ம நிஷ்டையுடன் ராஜ்யத்தை ஆண்டு வந்தனர்.

காலப்போக்கில் அவர்களுக்கு தக்ஷன் புத்திரனாகப் பிறந்தான். அவன்தான் அபிநவதக்ஷன். தான் முற்பிறவியில் இழந்த பிரஜாபதித்வம் முதலிய தெய்விக ஸம்பத்துக்கள் முழுவதும் திரும்பப் பெற்றான். தேஜஸும், பிரதாபமும் கூடிய தன்

மகனிடம் தேசத்தை ஒப்புவித்து ப்ரசேதஸ்ஸுக்கள் காட்டிற்குத் தவம் செய்யச் சென்றனர். பிரம்ம நிஷ்டையும் ஈச்வர ஸாக்ஷாத்காரமும் அவர்களுக்கு முன்பே கிடைத்திருந்த போதிலும், திரும்பவும் ஸம்ஸாரத்தில் ஈடுபட்டதால் அவற்றை இழந்துவிட்டனர். ஸ்ரீநாரத மஹரிஷியின் ஞானோபதேசத்தால் பக்தி ஞான வைராக்யங்களும் பிரம்ம நிஷ்டையும் அவர்களுக்குத் திரும்பவும் கிடைத்தன. சில காலம் தவம் செய்து, ஸம்ஸார பந்தத்திலிருந்து முழுவதும் விடுபட்டு, முடிவில் முக்தியையும் அடைந்தனர்.

இவ்வாறு ப்ரசேதஸுக்களின் சரித்திரத்துடன் விதுர மைத்ரேய ஸம்பாஷணை முடிவடைகிறது. முதலில் கூறியபடி ஸம்ஹாரம்தான் நான்காவது ஸ்கந்தத்தில் கூறப்பட்டுள்ள முக்கியமான விஷயம். ராக துவேஷத்தினால் தூண்டப்பட்ட செயல்களும், அதனால் ஏற்படும் அழிவும் இந்த ஸ்கந்தத்தில் ஒவ்வொரு கதையின் மூலம் கூறப்பட்டுள்ளது.

எதிர்மறையான இரட்டைகளின் சேர்க்கையே அழிவின் சாதாரண காரணமானாலும், அவற்றை சம பாவத்தில் நோக்குவதே நிலையாக நிற்க முடிவதற்குக் காரணமாகிறது. எதிர்மறையான இரட்டைகளனைத்தும் ரஜஸ் தமஸ் குணங்களின் வடிவங்கள். இச்சா க்ரியைகளும், விக்ஷேப ஆவரணங்களும், வாதமும் பித்தமும், ரஜஸும் தமஸும், ராக த்வேஷங்களும், சிதோஷ்ணங்களும் இவை அனைத்தும் ஒரே அடிப்படைத் தத்துவத்தின் இரண்டு தோற்றங்கள். இச்சா க்ரியைகளின் சேர்க்கையால் ஜீவத்வமும், விக்ஷேப ஆவரணங்களின் சேர்க்கையால் புத்தியும், ரஜஸ் தமஸ் சேர்க்கையினால் மனதும், வாத பித்த சேர்க்கையினால் சரீரமும், ராக த்வேஷங்களின் சேர்க்கையினால் உலக அனுபவங்களும், சீதோஷ்ண சேர்க்கையினால் இவ்வுலகமும் அழிகின்றன.

இதே இருமைகள் ஸமமாக இருக்கும்போது இவைகளே உலகை நிலைநிறுத்தவும் செய்கின்றன. இதுதான் இந்த ஸ்கந்தத்தில் வெளிப்படும் ஸம்ஹாரம் என்பதன் உட்பொருள். இதை விளக்குவதற்காகவே ஒவ்வொரு கதையும் கூறப்பட்டது. அது மட்டுமல்லாமல், அழிவில் உருவான இந்த உலகில், அழிவின் நடுவில்தான் ஒவ்வொரு மனிதனும் வாழ்கிறான். எல்லோரும் ஒவ்வொரு நிமிடமும் அழிந்துகொண்டே இருக்கிறார்களென்றாலும், இங்குள்ள அழிவின் நடுவிலும், எந்த நிலைக்குள்ளானாலும், எவரும் முக்தி பெறுவதற்கு தடை ஒன்றுமில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

ஒரு ஜீவன் சிறுவன், ஆண், பெண், யுவன், வயோதிகன் முதலிய வாழ்க்கையின் ஏதோ ஒரு நிலையில்தான் இருப்பான். எந்த நிலையில் இருந்தாலும், முக்திக்குத் தடையில்லை. பெண்ணாக இருப்பது தடையில்லை என்பது ஸதிதேவி சரித்திரத்தினாலும், சிறுவனாக இருப்பது தடையில்லையென்பது துருவனுடைய சரித்திரத்தினாலும், யுவனாக இருப்பது தடையில்லையென்பது பிருது சக்ரவர்த்தியின் கதையிலிருந்தும், வயோதிகம் தடையில்லை என்பது ப்ராசீன பர்ஹிஸ் கதையிலிருந்தும் தெளிவாகிறது.

அதனால் பாரத பூமியில் மனிதனாகப் பிறந்து வாழும் ஒருவனுக்கு முக்தியடைய தடையேதுமில்லையென்றும், பொதுவாக முக்தியடையாமலிருப்பது அவர்களின் சிரத்தையின்மையினால் என்பதும் உள்கருத்து.

மூன்றாவது ஸ்கந்தத்தின் ஆரம்பத்தில் தொடங்கிய விதுர மைத்ரேய ஸம்வாதம்

இத்துடன் முடிந்தது. மைத்ரேய மகரிஷியின் யுக்திபூர்வமான ஞானப்ரவாகத்தைக் கேட்டு, எல்லா சந்தேகங்களும் தீர்ந்து திருப்தியடைந்தவராக விதுரர் திரும்பிச் சென்றார்.

மனிதன் இன்பத்திற்காகவே உயிர் வாழ்ந்தும் கர்மங்களைச் செய்தாலும், இன்பம் கிடைக்காதது மட்டுமல்லாமல், துக்கம் அதிகரிக்கவும் செய்கிறது. எவ்வளவு முறை இதை அனுபவித்தாலும் ஒருவருக்கும் இது புரிவதில்லை. இது எதனால் என்பதுதான் விதுரரின் முக்கியமான கேள்வி. இதற்குப் பதிலாக மைத்ரேய மஹரிஷி, வராஹ அவதாரம், கபில வாஸுதேவ உபதேசம், தக்ஷ சரித்திரம், துருவ சரித்திரம், ப்ருது உபாக்யானம், புரஞ்சன உபாக்யானம் என்று ஆறு கதைகளைக் கூறினார்.

இதன் தத்துவம், சரீரம், மனம், புத்தி இவைகள்தான் ஒரு ஜீவனின் முக்கிய உபாதிகள். இதில் சரீரம் கர்மத்தின் உறைவிடம், மனம் எண்ணங்களின் உறைவிடம், புத்தி அறிவின் உறைவிடம். ஒருவனின் ஸம்ஸ்காரம் ஞானம், அஜ்ஞானம் எதுவானாலும், அது இந்த மூன்று உபாதிகளின் வாயிலாக வெளிப்படுகிறது.

புத்தியிலிருக்கும் அறிவுதான் மனதில் எண்ணமாகவும், அந்த எண்ணமே உடலில் செயலாகவும் வெளிப்படுகிறது. அதனால் அஜ்ஞானியின் செயலும், எண்ணமும், அறிவும் அஜ்ஞான ஸ்வரூபமாக இருக்கும். அறிவுள்ள ஒருவனது செயலும் எண்ணமும் அறிவும் ஞான ஸ்வரூபமாக இருக்கும். ஆகையால் அஞ்ஞானத்தின் மூன்றுவித வெளிப்பாடுகளையும் ஒருவன் இல்லாததாக ஆக்க வேண்டும். அதனால் ஒன்றாக இருக்கும் ஞானத்தை மூன்று விதங்களில் கடைப்பிடிக்க வேண்டுமென வேதம் விதித்துள்ளது. அதன் விளைவாகத்தான் கர்மம், உபாஸனம், ஞானம் என்ற மூன்று காண்டங்களாக வேதம் உள்ளது.

அதனால்தான் சாஸ்த்ரங்களிலும் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற மூன்று யோகங்களும் உபதேசிக்கப்பட்டுள்ளன. சரீரத்தினால் கர்மயோகமும், மனதினால் பக்தியோகமும், புத்தியினால் ஞானயோகமும் ஒரே சமயத்தில் செய்யும் ஒருவன் அஞ்ஞானத்தை வென்று, ஞானம் நிறைந்தவனாகி உயர முடியுமென்பது வேதத்தின் கருத்து. இதுதான் மேற்கூறிய கதைகள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

வராஹ அவதாரத்தின் மூலம் கர்மயோகம் உபதேசிக்கப்பட்டுள்ளது. கர்மமயமான யஜ்ஞ ஸம்ஸ்காரம்தான் வராஹ ரூபமாக ஆயிற்று என்று முன்பு கூறப்பட்டது. கபிலோபதேசத்தில் பக்தி, யோகம், ஸாங்க்யம் என்ற மூன்றும் உபதேசிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்றுவித உபாஸனைகளின் மூலம் மூன்றுவிதமாக மனதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது. மூன்றாவதான தக்ஷ சரித்திரத்தில் கூட பேத புத்தியையும், கர்மடத்வத்தையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டும் புத்தியின் அசுத்தமான கீழ்நிலைகளல்லவா? இவையிரண்டும் அகலுவதுதான் ஞானத்தின் லக்ஷணம். நான்காவதான துருவ சரித்திரத்திலும் வித்யை, அவித்யை, விவேகம், அவிவேகம் ஆகியவற்றின் நிலைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஜீவன்தான் உத்தானபாத மஹாராஜா. அவருடைய அந்தக்கரணமான அந்தப்புரத்தில் இருக்கும் வித்தையும் அவித்தையும்தான் ஸுநீதியும், ஸுருசியும். அவர்களுடை புத்திரர்கள்தான் விவேகமும் (துருவன்), அவிவேகமும்.

வித்தையையும் விவேகத்தையும் மதித்து வளர்ப்பவன், அறிய வேண்டியதை அறிந்து, அழிவில்லாத நிலையை அடைவான். அவித்யையையும் அவிவேகத்தையும் மதித்து வளர்ப்பவன், அழிவையே அடைவான். ஒருவன் ஆன்மிகத்தில் உயர்ந்தால்

அவனுக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும்கூட நன்மை கிடைக்குமென்பது ப்ருது சரித்திரத்திலிருந்து தெரிகிறது. இது ஒன்றும் முடியாதவன் மீண்டும் மீண்டும் ஸம்ஸாரத்தில் உழன்று, பல காலங்களிலும், பல தேசங்களிலும், பல யோனிகளிலும் பிறந்தும் இறந்தும் கொண்டேயிருப்பான் என்பது புரஞ்சனனின் கதையிலிருந்து தெளிவாகிறது.

இதைக் கேட்ட விதுரர் அறிய வேண்டியதை முழுவதும் அறிந்து, திருப்தியுடன் சென்றார். இவ்விதமாக நான்காவது ஸ்கந்தம் நிறைவடைகிறது.

## இந்த இணையதளத்தைப் பார்க்கவும்:- www.arshaavinash.in

கீழ்கண்ட புத்தகங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>வேதாந்தம் பற்றிய ஆங்கிலப் புத்தகங்கள்</u> :–**

இந்திய கலாச்சாரம், யோகா, கீதை, உபநிஷத்துகள், பிரம்ம சூத்திரம் மற்றும் வேதாந்த புத்தகங்கள்.

**<u>வேதாந்தம் பற்றிய தமிழ் புத்தகங்கள்</u>:-**

இந்திய கலாச்சாரம் , உபநிஷத்துக்கள் மற்றும் வேதாந்த புத்தகங்கள்

**<u>சமஸ்கிருத இலக்கண புத்தகங்கள்</u>:-**

வேதாந்த மாணவர்களுக்காக சமஸ்கிருத இலக்கண புத்தகங்கள்

**<u>சமஸ்கிருத பாட புத்தகங்கள்</u>:-**

சங்கர பாஷ்யத்துடன் கூடிய கீதை, உபநிஷத்துகள், பிரம்மசூத்திரம் ஆகியவை.

**<u>இந்திய கலாச்சாரம் பற்றிய ஆங்கிலப் புத்தகங்கள்</u>:-**

இந்திய கலாச்சாரம் மற்றும் யோகா பற்றிய புத்தகங்கள்

**<u>இளைஞர்களுக்கான புத்தகங்கள்</u>:-**

யோகா, இந்திய கலாச்சாரம், சுயமுன்னேற்றம் ஆகிய தலைப்புகளில் ஆங்கிலப் புத்தகங்கள்

**<u>குழந்தைகளுக்கான புத்தகங்கள்</u>:-**

இந்திய கலாச்சாரம் பற்றிய ஆங்கிலப் புத்தகங்கள்.

**<u>வேத பாராயணப் புத்தகங்கள்</u>:-**

வேத பாராயணங்கள் ஸமஸ்கிருதம் மற்றும் ஆங்கில மொழி எழுத்துகளுடன்.

**<u>கட்டுரைகள்</u>:–**

இந்திய கலாச்சாரம், வேதாந்தம் பற்றிய கட்டுரைகள் ஆங்கிலத்தில்.

**<u>ஆன்லைன் வினாடி– வினாவில் பங்கெடுக்கலாம்:-</u>**

கீதை, உபநிஷத்துக்கள் , பிரம்மசூத்திரம் ஆகியவற்றில் ஆன்லைன் வினாடி– வினா.

**ஆர்ஷ அவிநாஷ் பவுண்டேசன்**

104, 3வது வீதி, டாடாபாத், கோயமுத்தூர் – 641012

போன் – 9487373635

ஈ மெயில் :- arshaavinash@gmail.com

www.arshaavinash.in